# ஜீவநதி

கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

253

ஆளுமைச் சிறப்பிதழ்

மாசி 05.02.2025

100/-

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



க.பரணீதரன்

கோகிலா மகேந்திரன்

வசந்தி தயாபரன்

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்

புலோலியூர் வேல்நந்தகுமார்

கே.எம்.செல்வதாஸ்

எம்.கே.முருகானந்தன்

ஏ.எஸ்.சற்குணராஜா

இ.சு.முரளிதரன்

த.கலாமணி

# எம்.கே.முருகானந்தன் சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2025.02-.05 -மாசி - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

**மருத்துவம் - இலக்கியம் - அறிவியல் - துறைகளின் வசீகரமாகத் திகழும் வைத்தியகலாநிதி எம்.கே.முருகானந்தன்**
க.பரணீதரன்............ ................................ 03

**எம்.கே.முருகானந்தனின் "உறங்கும் உண்மைகள்" சிறுகதைத்தொகுதி ஒரு பருந்துப் பார்வை**
கோகிலா மகேந்திரன்............................. 07

**"மறந்து போகாத சில..." நூலை நினைத்து**
வசந்திதயாபரன்...................................... 11

**நலவியல் இலக்கியத்திலோர் புதுவகைப் புனைவு எம்.கே.முருகானந்தனின் "டாக்குத்தரின் தொணதொணப்பு"**
புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்............ 14


**எம்.கே.முருகானந்தனின் காட்சிக்கவி தரிசனமாய் "மறந்து போகாத சில..." ஒரு கவிநய நோக்கு**
புலோலியூர் வேல்நந்தகுமார்........................17

**இப்படியும் பார்க்கலாமா அறிவியலை என்ற கேள்விகளுக்கு விடை பகரும் "மலைப்பூட்டும் மருத்துவ அறிவியலை அறிந்து கொள்வோம்"**
கே.எம்.செல்வதாஸ்................................ 21


**நூல்களுடன் பிணைந்து உறவாட இணைத்து நிற்கும் வாசிப்பின் நினைந்தூறல்**
ஏ.எஸ்.சற்குணராஜா.............................. 26

**நாதீன்மான நகரும் படிமங்கள்**
இ.சு.முரளிதரன்.................................... 28

**"மருந்தெனல் நோய் இனி வராதிருக்க" அறிவியற் பிரசுரமொன்று பற்றிய சில குறிப்புகள்**
த.கலாமணி............ 30



**கவிதை**
எம்.கே.முருகானந்தன் / 32



**சிறுகதை**
எம்.கே.முருகானந்தன் / 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2025 மாசி இதழ் - 253**



**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர்கள்:**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



**ஜீவநதி**
**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## கொண்டாட்டத்திற்குரிய
## வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன்

வைத்தியகலாநிதி எம்.கே முருகானந்தன் அவர்கள் மருத்துவம், இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் தொடர்ச்சியாக இயங்கி வருகின்ற எழுத்தாளராக விளங்குகின்றார். இளமைக்காலம் முதல் இலக்கிய ஆர்வம் கொண்ட வைத்தியர் அவர்கள் மக்கள் தேவை அறிந்து மக்களது பயன்பாட்டிற்குரிய மருத்துவநூல்களை வெளியிட்டுள்ளார். சாதாரண மக்களும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் மருத்துவம் சார்ந்த விடயங்களை நூல்களாக வெளியிட்டு மக்கள் மனம் கவர்ந்த வைத்தியராக திகழ்பவர். இலக்கியத்திலும் தீவிர வாசகராக விளங்கும் மருத்துவர் அவர்கள் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நூல் விமர்சனங்கள், சினிமா விமர்சனங்கள் என்பவற்றை எழுதி வருகின்றார். நூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கான விமர்சனங்களையும் சிறந்த திரைப்படங்கள் பற்றிய நூற்றுக்குமேற்பட்ட விமர்சனக் குறிப்புகளையும் எழுதியுள்ளார். புதிய விடயங்களை இலக்கியத்தில் தேடி அறிவதில் அதிகநாட்டமுடையவராக விளங்குகின்ற வைத்தியர் அவர்கள் பருத்தித்துறையில் அறிவோர் கூடல் என்ற இலக்கியவட்டத்தை உருவாக்கி அதன் ஊடாக பல்வேறு இலக்கியவாதிகளும் சந்தித்து கதைத்து உறவாட வழிசமைத்தவர். பல இலக்கியக்கூட்டங்கள், கருத்தரங்குகள், நூல் வெளியீடுகளுக்கு தலைமை தாங்கியும் உரையாற்றியும் நிகழ்வைக் கனதியுறச் செய்தவர். அமைதியான பேச்சும் தன்னடக்கமான இயல்பும் காரணமாக அனைவராலும் விரும்பப்படும் இனிய மனிதராகத் திகழ்ந்து வருகின்றார். சமூக சேவைகளையும் மருத்துவ சேவையையும் மேற் கொண்டு வருகின்றார். மருத்துவத்துறையில் புகழ் பெற்ற குடும்பநல வைத்தியராக விளங்குகின்றார். இளம் எழுத்தாளர்கள் முதல் மூத்த இலக்கியவாதிகள் வரையில் மிகவும் மரியாதையுடன் பழகுகின்ற மன இயல்பைக்கொண்டவராக விளங்குவதோடு தான் படித்த நல்ல விடயங்களை மற்றவர்களுக்குப் பகிரும் இயல்பும் வாய்த்தவர். அமைதியாக இருந்து கொண்டு ஆர்ப்பாட்டம் இல்லாமல் 14 மருத்துவ அறிவியல் நூல்களையும் 6 இலக்கிய நூல்களையும் தந்துள்ள வைத்தியர் அவர்களின் இலக்கிய மருத்துவ புலமையை கொண்டாடும் முகமாக இந்த இதழை ஜீவநதி வெளியிட்டு மகிழ்கின்றது.


- க.பரணீதரன்


ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன், சோ.தேவராஜா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருத்துவம் – இலக்கியம் – அறிவியல் – துறைகளின் வசீகரமாகத் திகழும் வைத்தியகலாநிதி எம்.கே.முருகானந்தன்


க.பரணீதரன்

ஈழத்து இலக்கிய வரலாற்றிலே வைத்தியத்துறையில் பணியாற்றிக் கொண்டு இலக்கியம் படைக்கும் படைப்பாளர்கள் மிகச் சொற்பமே. வைத்தியர்களாக இருக்கும் பலர் பல்வேறு வைத்தியம் சார்ந்த நூல்களை எழுதியுள்ளார்கள். ஆனால் அவர்கள் இலக்கியம் படைப்பதில் பெரிதாக ஆர்வம் காட்டுவதுமில்லை; போதிய நேரமும் அவர்களுக்கு வாய்ப்ப தில்லை. பேராசிரியர் நந்தி, தி.ஞானசேகரம், ச.முருகானந்தன், எம்.கே.முருகானந்தன் ஆகியோர் வைத்தியத்துறையில் பிரகாசித்துக் கொண்டு இலக்கியத்திலும் குறிப்பிடத்தக்க படைப்பாளர்களாக விளங்குபவர்கள். முருகானந்தன் அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பருத்தித்துறை வியாபாரிமூலையில் கதிரவேற்பிள்ளை பரமேஸ்வரி தம்பதிகளுக்கு 1948.03.27 அன்று மகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வியை மேலைப்புலோலி சைவபாலிகா பாடசாலை, வியாபாரிமூலை சைவப்பிரகாச வித்தியாசாலை என்பவற்றில் பெற்றுக்கொண்டு உயர்தரக் கல்வியை ஹாட்லிக்கல்லூரியில் பெற்றுக் கொண்டார். ஆரம்பக்கல்வியை பெற்ற காலத்திலேயே நூல்களை வாசிப்பதில் ஆர்வம் உள்ளவராக விளங்கினார். இவரது பத்தாவது வயதில் தினகரன் பத்திரிகையில் “எனது கிராமம்” என்னும் கட்டுரையை எழுதி னார். சிறுவயதிலே இவருக்கு இலக்கிய ஆர்வம் ஏற்படக் காரணமாக இவரது உறவினர் களான பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, கவிஞர் யாழ்ப்பாணன் ஆகியோர் காரணமாக அமைந்தார்கள். சிறுவயதிலேயே இவர் கல்கி, ஆனந்தவிகடன், கல்கண்டு, குமுதம் போன்ற ஜனரஞ்சகப் பத்திரிகைகளை வாசித்ததுடன் மல்லிகை, சிரித்திரன், கணையாழி, தாமரை, தீபம் போன்ற இலக்கிய இதழ்களையும் வாசித்துள்ளார். பாடசாலைக்காலத்தில் இவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்த ஆசிரியர்கள் இவருக்கு இலக்கியத்தில் ஆர்வம் ஏற்படக் கூடிய வகையில் கற்றலை மேற் கொண்டு இருக்கிறார்கள். ஹாட்லிக்கல்லூரியில் கற்ற காலத்தில் ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த சஞ்சிகை களில் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. அவ்விதழ் ஒன்றில் இடம் பெற்ற "குறள் காட்டும் நட்பு" என்ற கட்டுரை ஆசிரியர்கள் பலரது பாராட்டை இவருக்கு வழங்கியதோடு இலக்கிய ஈடுபாட்டை இவரிடையே அதிகரிக்கக் காரணமாக அமைந்தது. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத் தின் மருத்துவபீடத்துக்கு 1970 ஆம் ஆண்டு தெரிவாகி 1975 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்து வைத்தியராக வெளியேறினார். தொடர்ந்து பட்டமேற்படிப்பாக Diploma in family medicine மேற்கொண்டு பட்டத்தைப் பெற்றுக் கொண்டு பதுளை ஆதார வைத்தியசாலையில் முதல் நியமனத்தை பெற்றுக் கொண்ட இவர் 1978-1980 வரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் பணியாற்றினார். 1981 அளவில் தனியாக மருதடி பருத்தித்துறையில் தனியார் வைத்திய சாலை(medi clinic) ஒன்றை அமைத்து இன்று வரை தனியார் மருத்துவனையை நடாத்தி மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்குகின்றார். இடைக் காலத்தில் கொழும்பு - வெள்ளவத்தையிலும் சில ஆண்டு காலம் தனியார் வைத்தியசாலை அமைத்து மருத்துவச்சேவையாற்றினார். குடும்ப மருத்துவராக இவர் மருத்துவ சேவையை வழங்கி வருகின்றார். பொது மக்களுக்கு பயன்படக்கூடிய மருத்துவக்கட்டுரைகளை ஈழநாடு, சஞ்சீவி, ஈழநாதம், முரசொலி, உதயன், ஆகிய யாழ்ப்பாணப்பத்திரிகைகளிலும், விரகேசரி, தினகரன், தினக்குரல் போன்ற கொழும்புப் பத்திரிகை களிலும் எழுதி உள்ளார். "வைத்தியக் கலசம்" என்ற தலைப்பில் 50 இற்கு மேற்பட்ட தொடர் கட்டுரைகளை முரசொலியில் எழுதியிருந்தார் இது பின்னர் நூலுருப்பெற்று பல வாசகர்களைச் சென்றடைந்தது. சிரித்திரன் சஞ்சிகை யிலும் "ஒரு டாக்டரின் டயரியிலிருந்து" என்ற தலைப்பில் மருத்துவம் சார்ந்த தொடர் கட்டுரைகளை எழுதி வந்தார். அதுவும் பின்னர் நூலாக வெளிவந்தது.



#### மருத்துவத்துறை சார்ந்த நூல்கள்

மருத்துவத்துறை சார்ந்து இவர் 14 நூல்களை எழுதியுள்ளார்.

1. சிறுவர்கள் கண்களைக் காக்க வாரீர்
2. தாயாகப்போகும் உங்களுக்கு
3. எயிட்ஸ்
4. பாலியல் நோய்கள்
5. போதையைத் தவிருங்கள்
6. வைத்திய கலசம்
7. நீங்கள் நலமாக
8. நீரிழிவுடன் நலமே வாழுங்கள்
9. கொலஸ்டோல் கட்டுப்படுத்துவது எப்படி?
10. டொக்டரின் டயறியில் இருந்து
11. உயர் இரத்த நோயைப் புரிந்து கொள்ளல்
12. உங்கள் குழந்தையின் நலமான வளர்ச்சியும் சில பிரச்சினைகளும்
13. மருத்துவ அறிவியல்
14. டாக்டரின் தொணதொணப்பு


ஆகிய நூல்களை எழுதி மக்கள் நலனுக்காக உழைக்கும் வைத்தியராக விளங்கி வருகின்றார்.

"சிறுவர்களின் கண்களைக் காக்கா வாரீர்"என்ற நூல் கண் பாதுகாப்பை பற்றிய விழிப்புணர்வுப் பிரச்சார நூலாக விளங்குகின்றது. தாய்மார்கள் தமது பிள்ளை களின் கண்களில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு அதன்வழியாக பிள்ளைக்கு ஏற்படும் நோய்களைக் கண்டு உணர இந்நூல் வழிவகுப்பதாக அமைந்துள்ளது.

1989 ஆம் ஆண்டு "தாயாகப் போகும் உங்களுக்கு" என்ற நூலை வெளியிட்டார். கர்ப்பம், தாய்மை? ஆரோக்கியம், உடல்வனப்பு, பிரசவம், பிறந்த குழந்தையின் பராமரிப்பு, கர்ப்ப காலத்தில் தாய்மார்கள் பின்பற்ற வேண்டிய முறைகள், சிகிச்சை நிலையங் களிற்கு செல்ல வேண்டிய தவணைகள், பிரசவகால பிரச்சினைகள், குடும்பக் கட்டுப்பாட்டுமுறைகள் போன்ற பலவிடயங்களை உள்ளடக்கி மிக விரிவான நூலாக பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் ஏற்படும் சந்தேகங்களிற் கும் பயத்திற்கும் விடை பகிர்கின்ற அருமையான நூலாக இந்நூல் வெளியானது. கர்ப்பம் தரித்த தாய்மார்கள் அனைவரும் படிக்க வேண்டிய நூலாக இந்நூல் அமைந்துள்ளது. இந் நூல் இன்று 4 பதிப்புகளைக் கண்டிருப்பது இந்நூலின் முக்கியத்துவத்தை பறை சாற்றுகின்றது. மேலும் இந்நூல் சாகித்திய விருதையும் இலங்கை இலக்கியப் பேரவை விருதையும் பெற்றுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலியல் பற்றி போதிய அறிவில்லாத, மூடிய கட்டுண்ட சமுதாயமான தமிழர் சமுதாயத்திற்கு பாலியல் நோய்கள் தொடர்பான விரிவான விளக்கங்களை முன்வைக்கக் கூடிய நூலாக "பாலியல் நோய்கள்" என்னும் நூல் விளங்குகின்றது. பாலியல் நோய்கள், நோய்பரவுவதற்கான காரணங்கள், நோய்த் தடுப்பு முறைகள், நோய் ஏற்பட்டவர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், மேற்கொள்ள வேண்டிய சிகிச்சை முறைகள் பற்றிய விளக்கங்களை அனைத்து மக்களும் புரியக்கூடிய வகையில் இலகு தமிழில் தந்துள்ளார்.

"எயிட்ஸ்" நோய் மெதுவாக இலங்கையில் அரும்ப ஆரம்பித்த காலத்திலேயே எயிட்ஸ் நோய் பற்றிய விளக்கத்துடன் கூடிய சிறிய நூலை வெளியிட்டுள்ளார். எயிட்ஸ் ஆபத்தில் இருந்து மனிதன் தன்னைப் பாதுகாத்து கொள்ள வேண்டிய முறைகளை முன்வைத்தார். ஒருத்தனுக்கு ஒருத்தி என வாழ்தலினால் இந்த நோய் மேலும் பரவுவதை தடுக்கலாம் என்ற கருத்தை முன்வைத்ததோடு, குறித்து நோய் ஏற்படுத்து விபரீதங்களையும் அழிவுகளையும் நோயாளிப் பராமரிப்பு போன்ற விடயங்களை மிகத் தெளிவாக வாசகர்களுக்கு எடுத்துரைத்துள்ளார். இந்நூல் இலங்கையில் 3 பதிப்புகளையும் இந்தியாவில் 3 பதிப்புகளையும் கண்டிருக்கிறது.

நீங்கள் நலமாக என்னும் நூல் மீரா பதிப்பகத்தின் வெளியீடாக வெளியானது. 5 பதிப்புகளைக் கண்ட இந்நூல் சாகித்திய விருதையும் பெற்றுக் கொண்டது. கேள்வி விடைப்பாணியில் மக்களுக்கு ஏற்படும் நோய்கள் பற்றிய சந்தேகங்களை தீர்க்கும் நூலாக இது வெளியாகி பலரது பயன்பாட்டிற்கும் உரியதாக விளங்குகின்றது.

முரசொலியில் 1987-1989 வரையான காலப் பகுதியில் வெளியான அறுபதிற்கு மேற்பட்ட கட்டுரைகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்டு 40 கட்டுரைகளை உள்ளடக்கி "வைத்திய கலசம்" என்னும் நூல் வெளியானது. வைத்தியராக பணிபுரிந்து வருகின்ற வேளையில் மக்களிடம் காணப்படுகின்ற சுகாதாரம், நோய்கள், பராமரிப்பு பற்றிய அடிப்படை அறிவின்மை, அவை பற்றிய தவறான கருத்துகள், மூடக்கொள்கைகள், நோய்கள் பற்றிய அலட்சிய மனப்பாங்கு போலி வைத்தியர்களின் தில்லுமுல்லுகள், தவறான சுய வைத்தியங்கள் பயனற்ற விதத்தில் சிகிச்சைகளை அரைகுறையாக நிறுத்துதல் போன்றவற்றை அவதானித்து அவற்றை போக்கும் வகையில் இந்நூல் எழுதப்பட்டது. பிரஷர், மாரடைப்பு, நீரிழிவு, அலர்ஜி, தொய்வு, மலேரியா, நெருப்புக்காய்ச்சல், டெங்கு, வயிற்றோட்டம், இரத்தச்சோகை, தலையிடி, புற்றுநோய், சின்னம்மை, ஹோர்ணியா போன்ற பல நோய்கள்பற்றிய விளக்கமான கருத்துகளைத் தரும் நூலாக இது அமைந்துள்ளது.

எடை கூடுதல், சடுதியான எடைக்குறைவு என்பன மனிதனிடத்தில் பல்வேறு உடல் உளப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பாகவும் வைத்தியர் அவர்கள் "எடையைக் காத்து நலத்தைப் பேணுங்கள்" என்ற நூலை எழுதியுள்ளார். உங்கள் எடையை சரியான அளவில் பேணுவது எப்படி?, உங்களுக்கான உணவு, உடற்பயிற்சிகள், வாழ்க்கை முறை மாற்றங்கள் என உடலை சரியான விதத்தில் பேணும் வழிவகைகளை விளக்கமாக கூறும் நூலாக வெளிவந்துள்ளது.

கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்துவது எப்படி? என்னும் நூல் வழியாக கொலஸ்ட்ரோல் என்பது என்ன? இரத்தத்தில் கொலஸ்ரோல் அதிகரித்திருத்தலை அறிவது எப்படி?, இரத்த கொலஸ்ரோல் அதிகரிப்பிற்கான காரணங்கள், இரத்ததில் கொழும்பை கட்டுப்படுத்த நீங்கள் மேற்கொள்ள வேண்டியவை, இரத்த கொழுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பைக் குறைப்பதற்கான உணவு முறைகள், தவிர்க்க வேண்டிய உணவுகள், கொலஸ்ரோலைக் குறைப்பதற் கான ஆலோசனைகள், குறைக்கும் மருந்துகள் போன்ற விடங்களை உள்ளடக்கி இந்நூல் வெளியாகியுள்ளது.

இன்று இலங்கையில் வேகமாகப் பரவி வரும் நீரிழிவு நோய் பற்றிய விரிவான விளக்கங்களுடன் தன்னைத் தானே சரியாக பராமரிக்க வேண்டும் என்ற நோக்குடன் " நீரிழிவுடன் நலமே வாழுங்கள்" என்ற நூலைத் தந்துள்ளார்.

மருத்துவத்தைஅறிவியலுடன் இணைத்து மருத்துவ அறிவியல் என்னும் நூலைத்தந்துள்ளார்.

ஜீவநதி சஞ்சிகையில் தொடராக எழுதிய "டொக்டரின் தொணதொணப்பு" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரைகள் வாசகனுக்கு ஒரு இனிய உணர்வைத்தரக்கூடின. நகைச்சுவையும் மருத்துவமும் அறிவியலும் கலந்து எழுதப்பட்ட அருமையானதொரு நூலாக அமைந்து வாசகர்கள் பலரை ஈர்த்துள்ளது.

இவ்வாறான மருத்துவம் சார்ந்த அரிய நூல்களைத்துந்துள்ள வைத்தியவர் அவர்கள் சாயியிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். அதன் காரணமாக "சாயிகாட்டிய ஆரோக்கிய வாழ்வு" என்றும் நூலையும் எழுதியுள்ளார்.

**இலக்கியப் படைப்புகள்**

சிறுவயது முதல் வாசிப்பில் கொண்ட தீராகக் காதல் காரணமாக இலக்கியத்திலும் தன் சுவடுகளை பதித்துள்ளார் வைத்தியர் அவர்கள். அந்த வகையில் மல்லிகை, அமிர்த கங்கை, சிரித்திரன், வீரகேசரி, தினக்குரல், ஜீவநதி, மூன்றாவது மனிதன் போன்ற சஞ்சிகைகள் பத்திரிகைகளில் சிறுகதைகள், விமர்சனங்கள், சினிமா ரசனைக் குறிப்புகள், கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றைம் எழுதியுள்ளார். அந்த வகையில்,

1. மறந்துபோகாத சில (கட்டுரைத்தொகுப்பு)
2. உறங்கும் உண்மைகள் (சிறுகதைத்தொகுப்பு)
3. ஈழத்துக் கிராமியப் பாடல்கள் (கட்டுரைத்தொகுப்பு)
4. இரசித்த சினிமா (சினிமாக்கட்டுரைகள்தொகுப்பு)
5. வாசிப்பில் நினைந்தூறல் (விமர்சனக்கட்டுரைகள்)
6. மறந்துபோகாத சில (கவிதைத்தொகுப்பு)

ஈழத்து இலக்கியத்தில் விமர்சனம் சார்ந்து இயங்குபவர்கள் மிகச் சிலரே. இவர் சிறந்த ஒரு விமர்சகராகத்திகழ்ந்து வருகின்றார். தொடர்வாசகனாக விளங்கும் இவர் தன்னைக் கவர்ந்த நூல்களைப் பற்றிய விமர்சனங்களை அவ்வவ்போது எழுதி வருகின்றார். அத்தோடு தன்னைக் கவர்ந்த சினிமா பற்றிய ரசனைக் குறிப்புகளையும் அறிமுகக் குறிப்புகளையும் எழுதி வரு கின்றார். அந்த வகையில் 20 கட்டுரைகளை உள்ளடக்கி "மறந்து போகாத சில..." என்ற கட்டுரைத் தொகுப்பை மீரா பதிப்பகத்தினூடு வெளியீடு செய்துள்ளார். நூல்கள் பற்றிய விமர்சனங்கள், ஓவியர் மாற்கு, சினிமா விமர்சனங் கள் என பல்வேறுகட்டுரைகளை இணைத்து இந்நூலை வெளியிட்டுள்ளார்.

ஆரம்பகாலத்தில் வைத்தியர் அவர்கள் சிறுகதைத்துறையில் அதிக ஆர்வம் உள்ளவராகக் காணப்பட்டார். அந்த வகையில் அவர் எழுதிய 8 சிறு கதைகளை உள்ளடக்கி ஜீவநதி வெளியீடாக "உறங்கும் உண்மைகள்" என்னும் சிறுகதைத்தொகுப்பு வெளியாகி யுள்ளது. ஒரு காலத்தின் பிரதிபலிப்பாக மனித மனங் களின் ஏக்கங்களையும் அவலங்களையும், போர்க்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கீடுகளையும் இவரது கதைகள் பேசியுள்ளன. மனித மனங்களின் அவசங்களை வெளிப்படுத்தும் கதைகளாக இவை அமைந்துள்ளன. இடர்மிகுந்த காலத்தில் மக்கள் பட்ட துன்பங்களை வெளிப்படுத்தும் தொகுப்பாக இத்தொகுப்பு அமைந்துள்ளது.

"ஈழத்து கிராமியப்பாடல்கள்" என்னும் கட்டுரை நூல் வடிவம் பெற்றுள்ளது. இந்நூலும் ஜீவநதியின் வெளியீடாக வெளிவந்துள்ளது. கிராமியப்பாடல் என்றால் என்ன?, அதன் வரன்முறைகள் என்ன?, எங்கே இப்பாடல்கள் பாடப்படுகின்றன, இந்த பாடல் களின் சிறப்பு என்ன? இந்த பாடல்கள் மக்களிடையே ஏற்படுத்தும் தாக்கம் என்? இன்றை நிலையில் இப் பாடல்களின் நிலை என்ன போன்ற பல கேள்விகளுக்கு விடை பகிர்வதாக இந்நூல் அமைந்துள்ளது. கிராமத்து மக்கள் தமது வாழ்வை இரசித்து வாழ்பவர்கள்; அந்த வகையில் அவர்கள் தாங்கள்இரசித்தவற்றை பாடலா கப் பாடுகின்ற சுவையைப்பற்றி மிகச்சிறப்பாக எழுதி யுள்ளார். கிராமியப் பாடல்கள் பற்றிய ஆரம்ப அறி வினைப் பெறுவதற்கு உகந்த நூலாக இது விளங்கு கின்றது.

சினிமாப் பிரியனான வைத்தியர், தான் பார்த்த சினிமாக்கள், குறும்படங்கள் என்பவற்றில் நல்ல வற்றை, தனது மனதைக் கவர்ந்தவற்றை வாசகர் களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் பத்திரிகைகள், வலைத்தளங்கள், சஞ்சிகைகளில் எழுதிய விமர்சன இரசனைக் கட்டுரைகளின் தொகுப்பாக ஜீவநதியின் வெளியீடாக "இரசித்த சினிமா" என்னும் 20 கட்டுரை களை உள்ளடக்கிய கட்டுரைத் தொகுப்பை தந்துள் ளார். இலங்கைத் திரைப்படவரலாற்றில் ஒரு மைல் கல்லாக மதி சுதாவின் "வெந்து தணிந்தது காடு" என்னும் சினிமாவை விழித்து அதன் முக்கியத்துவத்தை ஆராய்ந்துள்ளார். தனக்கு கிடைக்கின்ற ஓய்வு நேரங்களில் நல்ல சினிமாப் படங்களை தேடிப்பார்க் கின்ற இயல்பைக் கொண்டிருக்கின்றார். தமிழ் படங்கள் மட்டுமல்லாது சிங்கள திரைப்படங்கள், ஈரானியத் திரைப்படங்கள், பிரெஞ் சினிமா, ஆங்கில சினிமா, மலையாளத் திரைப் படங்கள் எனப் பலமொழி சார்ந்த திரைப்படங்கள் பற்றிய கட்டுரை களையும் இத்தொகுப்பில் உள்ள டக்கி உள்ளார். குறித்த சினிமா வின் முக்கியத்துவம், கதைப் பிரதியின் தன்மை, நுணுக்கங்கள், காட்சி அமைப்புகள், கதையின் முக்கியத்துவம், மெருகு படுத்த வேண்டிய விடயங்கள், திரைக் கதை, தயாரிப்பாளர், டிரெக்ரர், காட்சி அமைப்புகளின் தன்மை பற்றிய தனது பார்வைகளை மிகச் சிறப்பாக முன் வைத்த தொகுப் பாக இது அமைந் துள்ளது.




தான் வாசித்த நூல் களில் கவனத்திற்குரிய நூற்பிரதி களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கில் வைத்தியர் அவர்கள் விமர்சனக் கட்டுரைகளை ஜீவநதி, மல்லிகை, வலைத் தளங்களில் எழுதி வருகின்றார். அந்த வகையில் 55 நூல்கள் பற்றிய விரிவான அருமையான விமர்சனக் கருத்துக்களை முன்வைத்த கட்டுரைகளை உள்ளடக்கி "வாசிப்பில் நினைந்தூறல்" என்னும் விமர்சனக் கட்டுரைகளை உள்ளடக்கிய தொகுப்பை ஜீவநதியின் வெளியீடாக 300 பக்கங்கள் கொண்ட பெருந்தொகுப்பாக வெளி யிட்டுள்ளார். மூத்த எழுத்தாளர்கள், இளம் எழுத் தாளர்கள் எனப் பலரையும் மதித்தும் அவர்கள் மீது அக்கறை கொண்டும் நடப்பவர் வைத்தியர் அவர்கள். அதன் சாட்சியாக இந்நூலை அடையாளப்படுத்த முடிகின்றது. தன் விமர்சன கருத்துக்களால் படைப் பாளருக்கு ஓர் உந்து சக்தியை வழங்குவதோடு அடையாளத்தையும் வழங்குவதாக இவரது விமர்சனக் கருத்துகள் அமைந்துள்ளன. அந்த வகையில் ஆனந்தமயில், கே. எஸ்.சிவகுமாரன், நெயோல் நடேசன், பவானி சிவகுமாரன், பேகம் கதீஜா, க.பரணீதரன், தெணியான், த.கலாமணி, தி.ஞான சேகரன், வசந்தி தேவராஜா ஸ்ரீஸ்கந்தராஜா, அ.யேசு ராசா, பா.இரகுவரன், ரவி, குப்பிளான் ஐ.சண்முகன், செ.சுதர்சன், தமிழ்நதி, புலோலியூர் அ.இரத்தின வேலோன், நீர்வை பொன்னைன், மு.பொ., கந்தமுருக ஞானி, தாட்சாணி, சட்டநாதன், சிவ.ஆரூரன், நெல்லை க. பேரன், முகமது சமீம், சிறீரஞ்சனி, வெற்றிச்சொல்வி, ஸனீரா கபலிதின், பஞ்சகல்யாணி, சுமதிரூபன், ஈழக்கவி, இரா.முரளீஸ்வரன், பிரசாந்தன், சியாமிளா, பத்திநாதன், மெலிஞ்சிமுத்தன், சந்திரவதனா போன்ற படைப்பாளர்களது நூல்களைப் பற்றிய விமர்சனங் களாக அமைந்துள்ளன. சிறுகதைத் தொகுப்புகள், நாவல்கள் வாசிப்பதில் அதிக ஈடுபாடு உள்ளவர் என்பதை குறித்த நூல் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. படைப்பாளரை நோகடிக்காத வகையில் விமர்சனம் செய்கின்ற விமர்சனப் பாங்கினைக் கொண்டவர் வைத்தியர்.

"மறந்து போகாத சில" என்ற கட்டுரைத் தொகுப்பை வெளியிட்ட வைத்தியர் அவர்கள் 60 கவிதை களை உள்ளடக்கிய கவிதைத் தொகுதியையும் "மறந்து போகாத சில" என்னும் மகுடத்தின் கீழ் தொகுப்பாக்கி உள்ளார். புகைப் படப்பிரியரான வைத்தியர் அவர்கள் தனது புகைப்படக்கருவி மூலம் படம் பிடிக்கும் அருமை யான காட்சிகளை கவிதைகளாக்கி உள்ளார். அதாவது படத்திற்கு ஏற்றாற் போற் கவிதை களை தந்துள்ளார். உண்மையில் இவை விழிப்புணர்வு, தகவல் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தும் கவிதைகளாகவே முகிழ்ந்துள்ளன. இந்நூலும் ஜீவநதியின் வெளியீடா கவே வெளிவந்துள்ளது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



http://hainallama.blogspot.com/

2.மறந்துபோகாத சில

http://Suvaithacinema.blogspot.com/

3. steth இன் குரல்

http://stethinkural.blogspot.com

4.முருகானந்தன் கிளினிக்

httpp://Hainalama.world press.com/

5.முருகானந்தன் கிளிக்குகள்:

http://murugnnfanclics.wordpress.com?

வலைத்தளங்களின் ஊடாக மருத்துவக் குறிப்புகள், இலக்கியக்கட்டுரைகள், விமர்சனக் குறிப்புகள், நூல் அறிமுகங்கள், சினிமா அறிமுகங்கள் என்பவற்றை மேற்கொண்டு வருகின்றார். தான் எடுக்கும் புகைப் படங்களை வண்ணப் புகைப்படங்களாக இந்த வலைத் தளங்களில் பதிவேற்றி வருகின்றார். ஞாயிற்றுக் கிழமைகளில் தனக்கு கிடைக்கின்ற ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி பல்வேறு சரித்திர முக்கியத்துவம் சார்ந்த இடங்களுக்கும் சென்று புகைப்படங்கள் பிடித்தல், குறித்த இடங்கள் தொடர்பான ஆய்வுகள் என்பவற்றை யும் மேற்கொண்டு வருகின்றார்.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் ஊடகத்துறை பங்களிற்பிற்கான விருது, சிறந்த வலைப்பதிவாளர் விருது: கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க விருது, விழிசைச்சிவம் விருது என்பவற்றை பெற்றுக் கொண்டார்.

பழகுவதற்கு இனிமையான அனைவருடனும் முரண்பாடு இல்லாத அருமையான மனிதராக வாழ்ந்து வருபவர். வரும் நோயாளிகளை மிக இனிமையாக வரவேற்று, கோபம் கொள்ளாது அரவணைத்து அவர் களுக்கு வைத்தியம் செய்து அவர்களது நோய்களை குணப்படுத்தி வருகின்றார்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் எம்.கே.முரு கானந்தன் அவர்கள் படைப்புச் செயற்பாட்டாரளாக விளங்குவதோடு பல்வேறு நூல் வெளியீடுகளில் தலைமை வகித்தும் கருத்துரை நிகழ்த்தியும் வருவதோடு பல்வேறு சமூக சேவைகளையும் ஆற்றி வருகின்ற அற்புதமான மனிதப்பிறவியாக திகழ்கின்றார். இவரது பல படைப்புகள் நூலுருப்பெறாமல் இருக்கின்றன. குறிப்பாக தமிழக எழுத்தாளர்களது படைப்புகள் பற்றி இவர் எழுதிய விமர்சனக்கட்டுரைகள் வெளி வர வேண்டும். தொகுப்பு முயற்சிகளிலும் தொகுப்பாசிரியராக விளங்கு சில நூல்களை தொகுத்துள்ளார். அந்தவகையில் நீர்வை பொன்னையன் கதைகளை தொகுப்பாசிரிய ராக இருந்து தொகுத்துள்ளார். இன்று அறிவியல் புலத்தோடு இலக்கியத்தையும், மருத்துவத்தோடு இணைத்து இலக்கியத்தையும் எழுதக் கூடிய திறமை வாய்ந்தவர்கள் மிகக் குறைவு. ஆனால் வைத்தியர் அவர்கள் படைக் கின்ற படைப்புகளோடு அறிவியலையும் இணைக்கும் பாங்கு தனித்துவமானது. அவர் நீண்ட காலம் வாழ்ந்து மேலும் பல படைப்புகளைத் தர வேண்டும்.

மருத்துவ நூல்களோடு இலக்கியம் சார்ந்த நூல்களுமாக 20 நூல்களை இலக்கிய உலகிற்கு தந்துள்ள வைத்தியர் அவர்கள், இலக்கிய நண்பர்களை இணைத்து "அறிவோர் கூடல்" என்ற இலக்கிய அமைப்பை உருவாக்கி அதன் வழி யாக இலக்கிய நண்பர்களை மாதத் துக்கு ஒரு முறை பருத்தித்துறை யில் ஓர் இல்லத்தில் கூடிக் கலந்துரை யாட வழி சமைத்தவர். இந்த அறிவோர் கூடல் வடமராட்சிப் பிரதேசத்தில்மிக முக்கியமான நிகழ் வாக குறிப்பிடத் தக்கது. எழுத்தாளர்களுக்கு இடையில் தொடர் பாடலை, அறிமுகத்தை மேற் கொள்வதற்கும் படைப் பாளுமைகளை இனங்காண்பதற்கும் களமாக அறி வோர் கூடல் நிகழ்வு அமைந்திருந்தது. நல்ல திரைப்பட அறிமுகங்கள், விமர்சனங்கள், நாடகக் கலைஞர்கள் அறிமுகம:, எழுத்தாளர் அறிமுகம் என பல அரிய விடயங்களை அறிவோர் கூடல் மேற்கொண்டது. மிகுந்த ஆரோக்கிய மாக இடம்பெற்ற இந்த இலக்கிய கலந்துரையாடற் சந்திப்பு நிகழ்வுகள் போர்க்காலப் பிரச்சினைகள் காரணமாக வைத்தியர் அவர்களின் கொழும்பு இடப் பெயர்வுடன் முடிவுகண்டது வருதத்தத் திற்குரியது.

காலமாற்றத்திற்கு ஏற்ப நவீன தொடர்பாடல் சாதனங்களிற்கு ஏற்ப தன்னை தகவமைத்து கொள்வதில் வைத்தியர் அவர்கள் முன்னிற்பவர். அந்த வகையில்

1. ஹாய் நலமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எம்.கே.முருகானந்தனின் "உறங்கும் உண்மைகள்" சிறுகதைத்தொகுதி ஒரு பருந்துப்பார்வை


**கோகிலா மகேந்திரன்**

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மத்தியில், மருத்துவர்கள் படைப்பாக்க எழுத்துலகினுள் புகுந்துகொள்வது மிக அரிதாக நிகழ்வது. பேராசிரியர் நந்தி அவர்களின் பின் குறிப்பிடத்தக்க அளவில் அந்தப் பணியை வினைத் திறனுடன் செய்த ஒருவராக டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்களைக் குறிப்பிடமுடியும் எனில் அது மிகையில்லை.

இன்னொரு காலம், இடம், நேரத்துக்கு வாசகரை அழைத்துச் சென்று இன்னொருவரின் உள்ளத்தினுள், உருமாற்றம் பெற்றும், உணர்வு ரீதியாகவும், அறிகை ரீதியாகவும் புக வைக்கும் ஜாலத்தை அனுபவ ரீதியாகக் கொடுப்பதே சிறுகதை என ஒரு வரைவிலக்கணம் கூறும் 2024 ஐப்பசியில் ஜீவநதி வெளியீடாக வந்திருக்கும் "உறங்கும் உண்மைகள்" தொகுதியில் இந்த ஜாலம் கைகூடியிருக்கிறது. எட்டுக்கதைகளை மட்டும் கொண்ட இத் தொகுதி எம்.கே.முருகானந்தன் அவர்களின் முதலாவது தொகுதியென நம்புதல் கடினம். ஏனெனில் 1980களின் ஆரம்பத்திலேயே நல்ல சிறுகதை எழுத்தாளராக அறியப்பட்டவர் இவர்.

1986இல் நாங்கள் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தைத் தொடங்கி நடத்தி வந்தோம். அக்காலத்தில் பருத்தித்துறையில் அறிவோர் கூடலும் ஒழுங்காக நடைபெற்றது. எழுத்தாளர்கள் இங்கிருந்து அங்கு போவதும், அங்கிருந்து இங்கு வருவதும் கூட ஒரு பழக்கமாகவும் வழக்கமாகவும் இருந்தன. தவிரவும், ஒரு பத்திரிகை அல்லது சஞ்சிகையில் சிறுகதை ஒன்று பிரசுரமாகி, வாசிக்கும் சக எழுத்தாளர் மனதில் உணர்வுத் தொற்று ஒன்றை ஏற்படுத்தினால், உடனேயே அதைப்பற்றி ஒரு விமர்சனமாகவோ அல்லது சிறு கருத்தாகவோ எழுதிச் சக எழுத்தாளருக்குத் தபால் மூலம் அனுப்பிவிடும் ஆரோக்கியமான நடைமுறையும் இருந்தது. இதனால் எழுத்தாளர்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருந்தனர். விமர்சனம் எழுதுவதில் வடமராட்சி எழுத்தாளர்கள் சற்றுத் தூக்கலாக இருந்தனர் என்றாலும் தவறில்லை.

இயல், இசை, நாடக, ஓவியக் கருத் தரங்குகளை அடிக்கடி நடத்தி வந்த தெல்லிப்பழை க் கலை இலக்கியக் களத்தினர் அதன் பதினைந்தாவது பயனுள்ள ஒன்றுகூடலை 17.07.1988இல் யூனியன் கல்லூரி மண்டபத்தில் நாலு அரங்குகள் கொண்ட சிறுகதை நாளாக நடத்தினோம் .காலையில் முதலாவது அரங்கிற்குப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் தலைமை ஏற்றார். தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக் கட்டங்கள் பற்றிக் கருணை யோகனும் (பேராசிரியர் யோகராசா )ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் வரலாறும் வளர்ச்சியும் பற்றி எழுத்தாளர் அ.ரவியும் கட்டுரைகள் சமர்ப்பித்து உரை யாற்றியபின் எழுத்தாளர்கள் பங்குபற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கலந்துரையாடலைத் தொடக்கி வைப்பதற்கு எங்கள் மத்தியகுழு டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்களையே தெரிவு செய்திருந்தது என்றால், பேராசிரியர் நா. சுப்பிரமணியன் போன்றோரின் அபிப்பிராயத்தில் எம்.கே.எம் அவர்களின் சிறுகதைகள் அப்போதே சிறப்பிடம் பெற்றிருந்தன என்பதே அர்த்தமாகும். ஆயினும் அவர் விரைவிலேயே புனைவு எழுத்துக்களில் இருந்து விலகி நலவியல் எழுத்துக்குத் தன்னை அர்ப் பணித்துக்கொண்டார். இப்போதுதான் அவரது முதலா வது சிறுகதைத்தொகுதி கைக்கு வந்திருக்கிறது.

நூலின் அட்டையில் கறுப்புச் சிவப்புக் கலந்த நிறங்களும் சிவப்புப்பின்னணியில் தெரியும் பனை மரங் களும், மனித உருவங்களும் உள்ளே உள்ள கதைக் கருக் களின் மிகச் சிறந்த படிமங்களாகி அழகு தருகின்றன.

உள்ளே உள்ள கதைகளின் சிறுகதைக் கட்டமைப்பை அவதானிக்கும்போது, கதையின் ஆரம்ப வெளிப்படுத்தல், கதை மெல்ல மெல்ல மேலெழும் சம்பவங்கள், கதையின் உச்சம், கதை கீழிறங்கி ஏற்படுத்தும் ஈற்றமைதி ஆகியவை அனைத்தும் சிறப்பா கவே உள்ளன. சிறுகதையின் தந்தை எனப்படும் எட்கார் அலன் போ (Edgar Allan Poe ),(1809-1849)சிறுகதையின் முக்கிய பாத்திரம் எவ்வாறு தனது பிரச்சினையைத் தீர்த்துக்கொள்கிறது என்பது தொடர்பான ஈற்றமைதி மிக முக்கியமானது என்பார்.

மருத்துவர் ஒருவர் சிறுகதை எழுதும்போது ஏற்படும் தனித்துவமான பாணி பெரும்பாலான கதை களில் தக்கவைக்கப்பட்டிருக்கிறது. இதை இன்னொரு வகையில் சொன்னால், கதைகளில் எங்கேயும் விஞ்ஞான ரீதியான அல்லது மருத்துவரீதியான தவறு காணப்படவில்லை.

பாத்திரங்கள் வளர்த்துச்செல்லப்பட்ட முறை, உரைக்கப்பட்ட நேர்த்தி,மூக்கு முதலான புலன் அங்கங் களையும் கதைக்குள் கொண்டுவந்துவிடும் திறன் ஆகியவை கதைகளுக்கு மேலதிக புள்ளிகளை வழங்கி அமைகின்றன .

கதைகள் நிகழும் கால வாழ்வுமுறை ,அரசியல் சூழல், மக்களால் பேணப்பட்ட விழுமியங்கள், அவற்றிடையான முரண்கள் போன்றவிடயங்களும் தெளிவாகும் வகையில் கதைகள் எழுதப்பட்டுள்ளன. முக்கிய பாத்திரத்தின்(protagonist) நண்பர்கள், எதிரிகள், தெரிந்தவர்கள், இரகசியங்கள், ஆசைகள், பயங்கள் ஆகியவற்றையும் வாசகர் விளங்கிக்கொள்வதில் சிக்கல்கள் ஏதுமில்லை. இவை எல்லாமே கதைகளின் நேர்ப் பெறுமதிகள்.

தொகுதியை வாசிக்கும் எந்த ஒருவாசகரையும் எடுத்த எடுப்பில் ஈர்த்துவிடும் சிறுகதை “இனிமேல் நான் என்ன செய்ய?” என்ற பெண்ணியம் சார்ந்த கதை. போராட்ட கால அனர்த்தச் சூழலில் நிகழ்ந்த அவலங் களின் பின்புலத்தில் நகரும் இக்கதையின் பிரதான பாத்திரம் நகர்த்தப்படும் முறை மிக அருமை .அவள் இரண்டு பெரிய மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவங்களை ஏறத்தாழ ஒரே நேரத்தில் எதிர் கொள் கிறாள். மிக வலுக்கட்டாயமாக உயிர் அச்சுறுத்தல் சூழலில் அவளுடைய பெண்மை பறிக்கப்படுவது ஒன்று. அதேசமயத்தில் அவளுக்கு ஒரே துணையாக நின்ற சகோதரன் அவளுக்கு முன்னாலேயே சுட்டுக்கொல்லப் படுவது மற்றொன்று. அது அவ்வளவோடு போயிருந் தால் கூட அந்த மனவடுவைத் தாங்கிக்கொண்டு வாழ்ந் தோருக்கலாமோ என்று சிந்திக்கலாம் .வேண்டப்படாத கர்ப்பத்தைத் தாங்கிக்கொண்டிருப்பதாக அவள் உணரு வது வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் சம்பவம். இந்த மூன்றும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்து வருகை யில் அவளது வலி எப்படியிருந்திருக்கும் என்று ஊகிப்பதே கடினம். “நான் இப்ப என்ன செய்ய ?கொஞ்சம் சொல்லுங்கோ” என்று அப்பாத்திரம் கேட்பதாகக் கதையை நிறைவு செய்வார் ஆசிரியர். வாசகர் மனதில் சொல்லொணாத துயரைத் தொற்ற வைத்துக் கதை நிறைவுபெறும். அறிவியல் ரீதியாக யோசித்தால் “நீங்கள் இப்ப உடனடியா ஒரு நல்ல சீர்மியரிட்டைப் போங்கோ” என்று சொல்ல வேண்டும் என்று தோன்றும். கதைதான் என்றாலும் அதுவும் சாத்தியமில்லை. ஏனென்றால் முறையான உளவளத்துணைப் பயிற்சிகள் ஏறத்தாழ இக் காலப்பகுதியில்தான் எமது பிரதேசத்தில் ஆரம்பமா கின்றன. பலமான கேள்விகளுடனான உள்ளுணர்வை விட்டுச் செல்லும் கதை இது.

மறக்க முடியாத இன்னொருகதை “யாமிருக்கப் பயமேன்?” மரண பயத்தை முழுமையாக அனுபவித்த வைத்தியர் ஒருவரின் கதை இது. வைத்தியர் நந்த கோபனின் பாத்திரத்தை நிச்சயமாக இன்னொரு வைத்தி யரால் மட்டுந்தான் படைத்திருக்க முடியும். இயற்பண்பு வாதம் மிக அருமையாகப் பொருந்திவரும் கதை இது ."நானிருக்க “இல்லாமல் போய்” பயமேன்” மட்டும் இருந்தது என்று வரும் இடம் முக்கியமானது .

அவசரகாலக் கருத்தடை மாத்திரை பற்றிய விழிப்புணர்வுக்கதை என “ராமச்சந்திர மூர்த்தி வரு வானா?”வைக் குறிப்பிடலாம். தலைப்பில் ஒரு அழகியல் உணர்வு தொனிக்கிறது. அவளுக்கு “மலநாற்றம்” வீசு கிறது மனதினுள்”என்றோர் இடம் வரும். வாசகரின் மண நுகர்ச்சிக் கலங்களும் ஒரு நிமிடம் தூண்டப்பெறும். பாத்திரத்தைப் பொறுத்தவரையில் அது அவளது மணம் சார்ந்த இல்பொருள் காட்சி இல்லை. அதுவும் மனவடு வின் குணங்குறிதான். அந்தப் பாத்திரத்துக்கும் தேவைப் படுவது உள சிகிச்சையே.

மகுடக் கதையான “உறைந்துபோன உண்மை களின்” கருப்பொருள், கலாசாரச் சீரழிவு அக்காலப் பகுதியிலேயே முளைகொள்ளத் தொடங்கிவிட்டதைச் சுட்டும். “முருகுப்பிள்ளைப் பேய்”, “சோதனை” ஆகியவை பாடசாலைக்கால அனுபவங்களின் பதிவு. “புரியாத பார்வை”கணவன் மனைவி உறவின் புதிய பார்வை .

மொத்தமாகப் பார்த்தால் பின் அட்டையில் க.பரணீதரன் அவர்கள் குறிப்பிடுள்ளதுபோல் ,இவரது கதைகளில் உணர்வுத் தொற்றும்,உணர்வுத் தெறிப்பும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன என்ற கூற்றைத் தயக்கமின்றி வழிமொழியலாம். சக்தி மிகுந்த கதை நிகழ் களங்களில் வைத்து, நிறைவான மொழிக் கையாளுகையுடன் வந்திருக்கும் இந்நூலை அனை வரும் வாசிக்கவேண்டும். வாசித்து முடிக்கிறபோது இந்தப் பாத்திரங்களை எங்களுக்கும் நன்கு தெரியும் என்ற உணர்வு தொக்கு நின்று நூலின் வெற்றிக்குச் சங்கூதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "மறந்து போகாத சில..." நூலை நினைந்து!

வசந்தி தயாபரன்

இலக்கியத்தை வாழ்நாள் பணியாகக் கொண்டு அத்துறையில் இடைவிடாது இயங்கிக் கொண்டிருப்பவர், எழுத்தாளர் எம்.கே. முருகானந்தன் அவர்கள்! அவர் ஒரு வைத்தியர் என்ற அடையாளத்தைப் பின்னே தள்ளியதாக அவரது இலக்கியப்பணி நீண்டகாலமாகத் தொடர்வது மகிழ்ச்சியே!

இருபத்தொரு வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட இந்நூல், இன்றும் பேசப்படும் தகைமை பெற்றதொன்று. இரசனை என்ற நூலால் நெய்யப்பட்ட ஓர் படைப்பு, காலக்கணக்குக்கு அப்பாற்பட்டதாகப் பளிச்சிடுவது புதுமையன்று. அதிலும் கலையின் பன்முகப் பரிமாணங்களையும் தழுவியதாக, கலைநேசனாகத் திகழும் ஓர் இலக்கிய நெஞ்சத்தை எமது பார்வைக்கு இட்டுவருகின்ற மேலதிகப் பண்புநலனும் இந்நூலுக்கு அமைந்துள்ளது.

எமது மதிப்புக்குரிய எழுத்தாளர், அமரர் மு.பொ. எழுதியுள்ள "நடுநிலையும் கலைத்துவமும் கைகோர்த்து நிற்கும் விமர்சனங்கள்" என்கின்ற நெடிய கட்டுரை, இந்நூலுக்கான பொருத்தமான திறவுகோல்! "நடுநிலை நோக்கு" என்று நாம் பொத்தாம்பொதுவாகச் சொல்லிப்போகின்ற விமர்சனத்தளத்தை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டுவரும் முறைமையை அலசுகின்ற மு.பொ. அவர்கள், அதனை ஐந்து கூறுகளாக வகுத்து, விமர்சனத்துறைக்கு எவையெல்லாம் ஒவ்வாதவை என்பதையும் அதன்வழியே பிரகடனம் செய்கிறார். "புகுந்துவிடக்கூடாது" என அவர் பட்டியலிடுகின்ற அந்த விடயங்கள் இல்லாதபடி, மனம் ஒப்பிய ஈடுபாட்டுடன் எழுதப்பட்டதாக, எம்.கே. யின் இந்நூலை அவர் தரிசிக்கிறார், போற்றுகிறார்!

நூலாசிரியர் தன்னுரையில், கூறும் சில விடயங்களும் கவனிக்கத்தக்கவை. "இவை யாவும் ஒரே நோக்கத்திற்காக எழுதப்பட்டவை அல்ல. இதில் ஒரு சிலவே விமர்சன நோக்கில் எழுதப்பட்டவை: ஏனைய கட்டுரைகள், நான் பார்த்து இரசித்த திரைப்படங்களையும் கண்டு களித்த நிகழ்வுகளையும் வாசிப்பில் தோய்ந்த நூல்களையும் மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துவதற்காக எழுதப்பட்டவையே." என்ற பகுப்பு வாசகரைத் தெளிவூட்டி வாசிப்பை நெறிப்படுத்துவதாக அமைகிறது.

நூலில் உள்ள இருபது கட்டுரைகளையும் இந்த அடிப்படையில் நோக்கினால், இரு பெரும்பிரிவுகளாக வகுத்துக்கொள்ளலாம். அறிமுகவிழா உரைகளாக இரண்டும், அணிந்துரைகளாக நான்கும், ஆய்வுரையாக மூன்றும் என ஒன்பது கட்டுரைகள் படைப்பிலக்கியம் சார்ந்து எழுதப்பட்டவை. இவை தவிர, ஏனையவை, திரைப்படங்கள் பற்றிய பதிவுகளாக நான்கு, மொழிபெயர்ப்பு நூல் பற்றிய மனப்பதிவுகள் இரண்டு, சிற்பம், ஓவியம் குறித்த கட்டுரைகள் மூன்று, விமர்சனம் பற்றிய பொதுவான கட்டுரை ஒன்று என விரிகின்றன.

விமர்சனம் என்பதும் விமர்சனத்துக்கு உட்படவேண்டியதே! ஒருவகையில் இலக்கியத்தின் அறுபடாத தொடர்ச்சியையும், எழுத்தாளரதும் வாசகரதும் கருத்துப் பரிமாற்றங்களையும் பேணுவதாக அது அமைந்துவிடுகிறது. இக்கட்டுரையும் அவ்வகைமையைச் சேர்ந்தது. எம்.கே.யும், நூலின் முதலாவது கட்டுரையான, "இன்றைய விமர்சனங்கள் பற்றிய சில உரத்த சிந்தனைகள்" வழியாக, ஆக்கபூர்வமான விமர்சனங்கள் வரவேண்டும் என்ற தனது விழைவை அழுத்தமாக வெளிப்படுத்துகிறார்.

அடுத்து நாம் காண்கின்ற நீர்வை பொன்னையனது நூலான "மேடும் பள்ளமும்" குறித்த கட்டுரை, இவ்வாறு பேசுகிறது. "இந்த நூலை இன்று புதிதாகப் படிக்கும் ஒரு வாசகனுக்கு எத்தகைய உணர்வுகள் ஏற்படுகின்றன..." என்ற கேள்வியை எம்.கே. ஆரம்பத்திலேயே எழுப்புகிறார். அது 1961இல் வெளிவந்த நூல் என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள ஓர் அவகாசம் கிடைக்கிறது. இக்கட்டுரை, அந்நூலின் இரண்டாவது பதிப்பு 2003இல் வெளிவந்தபோது எம்.கே.யால் நிகழ்த்தப்பட்ட அறிமுகவுரை. கட்டுரையின் இறுதியில், "...பழஞ்சோறாய் இருந்தாலும் புளித்துச் சுவைகெடாது, வாசகரைக் கவர்கின்றது..." என எம்.கே.முருகானந்தன் முடிக்கிறார். நீர்வைக்கும் எம்.கே.இற்கும் இடையே நிலவி வந்த ஆழ்ந்த நட்புறவு பற்றி நான் நேரடியாக அறிவேன். எனினும், அந்த உறவுச்சாயல் சற்றேனும் தென்படாத வண்ணம், இக்கட்டுரை வடிக்கப் பட்டிருப்பது, விமர்சன வரன்முறைகள் குறித்த மு.பொ.வின் கருத்துக்களுக்கு வலுச்சேர்க்கிறது. அதுபோன்றே, தெணியானின் "காத்திருப்பு" பற்றிய அணிந்துரையின் சில வரிகள் எம்.கே.இன் ஆழமான பார்வையைச் சுட்டுவன. "ஒரு சமுதாயம் வெளியே பேசக் கூச்சப்படும் ஒரு விடயத்தினை மிகவும் கண்ணியமாகவும் நேர்மையாகவும் அழகுபடவும் தெணியான் சொல்கிறார்" என்று சிலாகிக்கும் வரிகள் அவரது உள்ளத்தில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபவை. தெணியானின் எழுத்துக்களைத் தொடர்ந்து வாசித்து வந்ததுடன் தெணியானையும் அவர் வாசித்துள்ளார் என்பதை இக்கட்டுரை புலப்படுத்து கிறது.

இந்நூலில் அடங்கியுள்ள ஆய்வுரைகளில் ஒன்று, மு.பொ.வின் "சூத்திரர் வருகை" எனும் கவிதை நூலுக்கானது. மு.பொ.வின் கவிதை வீச்சினை, நெஞ்சை ஊடுருவிப் பாயும் அவரது கவிவரிகள் வழியாக மிகப்பொருத்தமாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் எம்.கே! "காலத்தினூடு கடந்து செல்லும் ஆற்றல் உள்ளவர்" என மு.பொ.வின் ஆளுமையை எழுத்தாளர் ரஞ்சகுமார் சிலாகிப்பதையும் தொட்டுக் காட்டுவது, மிகப்பொருத்த மாக உள்ளது. புதிய தரிசனங்களை விழைகின்ற மு.பொ.வின் அப்பண்பு நலத்தை மு.பொ.வின் இன்னொரு படைப்பான "நோயில் இருத்தல்" எனும் நாவல் வழியாக எம்.கே. இக்கட்டுரையில் வெளிப்படுத்தி யுள்ளார். பரந்த வாசிப்பும் ஆழ்ந்த இரசனையும் இன்றி, இத்தகைய எழுத்து எவருக்கும் கைவருவதன்று!

புலோலியூர் இரத்தினவேலோனின் "விடியலுக்கு முன்" சிறுகதைத்தொகுப்பும் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. "புத்தம்புதிய கோணத்தில் தொகுக்கப்பட்ட கதைகள்" என்ற பாராட்டை வழங்குகின்ற எம். கே., அக்கதைகள் ஆசிரியரின் மெய்யனுபவங்களில் இருந்து ஊற்றெடுத்தவை என்ற அடிப்படையில், மனித வாழ்வின் முழுமையை உள்வாங்கும் நாவலுக்கான முன்வரை வாகக் கொள்ளத்தக்கவை என்ற தனது கருத்தையும் கூறிச்செல்கிறார்.

மற்றைய ஆய்வுரை, "தகவம் பரிசுக்கதைகள் - தொகுதி 1" நூலைப் பற்றியது. அக்கட்டுரையின் தலைப்போ, "இலக்கிய இரசிகர்களுக்கு தகவத்தின் பரிசு" என்று வனப்புற அமைந்துள்ளது. தகவத்தின் பணி. முக்கியமானதும் பாராட்டப்பட வேண்டியதுமான இலக்கியச்சேவை என்று சிலாகிக்கிறார், படைப்பாளி கள் பற்றிய சுவையான இலக்கியக் குறிப்புகளைக் கொடுத்திருப்பதையும் பாராட்டுகிறார். அதனை மேலும் மெருகூட்டலுக்கான தனது ஆலோசனைகளை முன் வைப்பதோடு, அத்தொகுதியில் அடங்கியுள்ள கதை களைப் பற்றிய தனது இரசனை நோக்கினையும் நடு நிலைத் தன்மையோடு பதிவு செய்கிறார். தரமான வற்றைத் தேர்ந்தெடுக்கும் பணியின் செம்மையைப் பேணுதல் குறித்த தனது ஐயப்பாடுகளையும் கேள்வி களாக முன்வைக்கிறார். காலஓட்டத்தில் அவற்றுக் கான பதில்கள் அவருக்குக் கிடைத்திருக்கும்.

இன்னொரு கட்டுரை, புலோலியூர் க.சதாசிவம் எழுதிய "அக்கா ஏன் அழுகிறாய்" என்ற தலைப்பிலான, சாகித்திய விருது பெற்ற சிறுகதைத் தொகுப்புக்கான அணிந்துரை. மிகச் சிறப்பாக, நுணுக்கமான பார்வை யுடன் எழுதப்பட்ட கட்டுரை என்ற சிறப்பு இதற்குண்டு. எம்.கே.யின் எழுத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று, தான் எவ்வாறு ஒரு நூலினை அல்லது விடயத்தை அணுகு கிறேன் என்பது குறித்த புரிதலை முதலில் வாசகரிடத்து ஏற்படுத்துவது! இந்நூலிலுள்ள பெரும்பாலான கட்டுரை களுக்கு இது ஒரு பொதுப்பண்பு. அது எத்துறை சார்ந்த படைப்பாக இருப்பினும் முதலில் எம்.கே.யின் பார்வைப் புலம் பற்றிய ஒரு தெளிவுடன் நாம் கட்டுரைக்குள் நுழைய முடிவதால், வாசகரான எமது புரிதல் மேம்படு கிறது. என்பது எனது கருத்து! அணிந்துரை என்ற வகையில், படைப்பாளி ஒருவர், தாண்டிச்செல்ல வேண்டிய நிகழ்படிகள் எவை, வாசகனது இரசனை விரிவு எப்படி நிகழ வேண்டும். படைப்புக்களின் சித்திரிப்பு முறை யில் முகிழ்க்கவேண்டிய நவீனப்போக்குகள் எத்தகை யன, முதலான கருத்துக்கள் இக்கட்டுரையில் சற்று விளக்கமாகவே பேசப்படுவதைக் காண்கிறேன். ஒட்டு மொத்தக் கட்டுரையின் அளவுடன் நோக்குகையில், அதன் விரிவு சற்று அதிகமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

இருபது வருடங்களுக்கு முன்னர், பொது மக்களுக்கான நலவியல் நூல்களின் வருகை சொற்ப எண்ணிக்கையிலேயே இருந்தது என்பதை நாம் அறிவோம். அவ்வேளையில், எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் "தாயும் சேயும்" நூல் வெளி வந்துள்ளது. இது பற்றி எழுதும் எம்.கே., குழந்தை நலவியல் துறை சார்ந்து பணியாற்றி. அத்துறையில் நிறைந்த அறிவும் அனுபவமும் நிறைந்த எழுத்தாளர் இதனை எழுதியமை, இத்துறைசார் நூல்களுக்கான வெற்றிடத்தை நிரப்புவதாகச் சிலாகிக்கிறார். எம்.கே.யும் இத்துறையில் "தாயாகப்போகும் உங்களுக்கு" எனும் நூலை எழுதியுள்ளார் என்பது எனது நினைவுக்கு வரு கின்றது. இதையொத்த இன்னொரு புது முயற்சியை வர வேற்கும் கட்டுரையாக, "க.நடனசபாபதியின் பருவமான வர்கள்" அமைகிறது. 2001இல் வெளிவந்த ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பான "பருவமானவர்கள்", தமிழில் அறிவியல் சிந்தனைகளைப் பரப்புவதற்கும், பேசக்கூசும் விடயப்பரப்புகளைப் பேசியும் வினவியும் தெளிவதற்கு மான பாதையைத் திறந்து விடுகின்றது என, இந்நூலின் சமூகப் பயன்பாடு குறித்து எம்.கே. தெளிவாக விளக்குகிறார். அதுபோன்றே, அமரர், கே.எஸ்.சிவ குமாரன் எழுதிய "அசையும் படிமங்கள்" நூல், திரைப் படக்கலை பற்றியும் அதன் உலகளாவிய சரித்திரம் தொடர்பிலும் நுணுக்கமான தகவல்களைக் கொண்ட தாக, திறனாய்வுகளையும் உள்ளடக்கியதாக அமைகிறது என்று எடுத்துரைக்கிறார். மொத்தத்தில். "திரைப்படக் கலையின் இலக்கணம் பற்றிய நூல்" எனப் புகழாரம் சூட்டுகிறார். அதற்கு மேலதிகமாக. நூலின் பயன்பாடு என்று தனியாகப் பட்டியலிட்டும் விளக்குகிறார். கே.எஸ்.ஸின் தகைமைகள் பற்றியும் வெகுவாகச் சிலாகித்து எழுதுகிறார். நூல் வெளியீட்டு விழாவில் நிகழ்த்தப்பட்ட உரையை, கட்டுரை வடிவில் கொண்டு வருகையில் சில செவ்விதாக்கங்கள் தேவைப்படலாம். ஆயினும், ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இத்தகைய நூல் ஒன்றின் வருகை, எத்துணை பெறுமதியாக இருந்திருக்கும் என்பதை எமக்கு இக்கட்டுரை தெளிவாக உணர்த்தி நிற்கிறது!

இரசனையுணர்வு என்பது, குறிப்பிட்ட ஒரு துறைக்குள் சிறைப்பட்டு விடுவது அன்று. இக்கட்டுரை யின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட வகைப் படுத்தலுக் கேற்ப, எழுத்தாகவன்றி ஓவியம். சிற்பம், சிலை என கலை வடிவங்களைப் பிரசவிக்கும் படைப்பாளிகள் குறித்த கட்டுரைகள் மூன்றையும் நாம் இந்நூலில் காணலாம். மனிதமனத்தின் அகக்காட்சிகளையும் அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றெடுக்கும் கருத்துகளையும், புறத்தே எம்போன்ற சாமானியருக்காக அவர்கள் வடிக்கிறார்கள்! அக்கலைப் படைப்புகள் மனித மனங்களோடு நேரடியாக உரையாட வல்லன! "ஐ.விஸ்வலிங்கம் -இசையைச் சிலையாய் வடிக்கும் கலைஞன்" எனும் கட்டுரையில் ஒரு வரி என்னை மிகவும் கவர்ந்தது. "...அவரது படைப்புகள் அழகான பாத்திரம் வடிப்பதுடன் நின்றுவிடவில்லை. அவலட்சணங்களையும் விகாரங்களையும் கூட கலை நயம் கொண்ட படைப்புகளாக உருவாக்க முடியும்..." என்பது, மிகவும் தீர்க்கமான பார்வை! நவீனமானதும் கூட! கலை மீதான செவ்வியல் திணிப்புப் பார்வைகளுக்கு அப்பால், வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே காட்டுவதால் ஒரு கலைவடிவம் தனிச்சிறப்புப் பெறுகிறது!

"ஓவியர் மாற்கு" என்ற வியத்தகு ஆளுமை பற்றிய கட்டுரையும், எம்.கே. மீதான எமது கணிப்பைப் பல படிகள் ஏற்றி வைத்துவிடுகிறது. மாற்கு என்ற கலைஞரின் பணியையும் அவரது மேதைமையையும் மிகவும் உணர்வுபூர்வமாக இரசிப்பதற்கும், எடுத்துரைப்பதற்கும் எம்.கே. என்ற எழுத்தாளருக்குள் ஒளிந்து கிடக்கும் கலாரசிகர் எமக்கெல்லாம் உதவுகிறார்! "சீமெந்துக்கலவையில் ஒரு கலைவடிவம்" என்பது, நம்நாட்டின் சிறந்த ஓவியரான ரமணியினால் வடிக்கப்பட்ட போராளிகள் சிலை பற்றி அணுஅணுவாக விபரிக்கும் ஒரு கட்டுரை. காலங்காலமாக உலகப் படைப்புகளை வியப்பதும் சில பெயர்களை மீளமீள உச்சரிப்பதும் என கடிவாளம் பூட்டப்பட்ட குதிரைகளாக வலம்வரும் எமக்கு, நம் நாட்டுக் கலைப்படைப்பைக் கண்டறியவும், உன்னித்து நோக்கவும், அதன் மேன்மையை உணர்த்தவும், வழிகாட்டியாக எம்.கே. என்ற ஒருவர் நிச்சயம் தேவைப்படுகிறார்!

அதிகம் பேசப்படாத நான்கு திரைப்படங்கள் குறித்த பதிவுகள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. மசாலா அம்சங்கள் கொண்டு தாளிதம் செய்து, சுவை சேர்க்கப்படாத காரணத்தால், பொதுவெளியில் இவை பேசப்படாமல் போயிருக்கலாம்! "அசட்டுக் காட்சிகள்" என்று எம்.கே. அவற்றுக்குப் பெயர் சூட்டியுள்ளமை மிகப் பொருத்தமெனவே படுகிறது. திரைப்படம் என்ற கலை வடிவத்தின் அடிப்படைப் பண்புகளை ஆராய்ந்தும், தான் நயக்கும் சிறப்புகளை அவற்றுடன் பொருத்திப் பார்த்தும் அவர் இக்கட்டுரைகளில் தனது பேனாவை நகர்த்துகிறார். அக்கட்டுரைகள் படங்களின் சமூகநோக்குப் பற்றி முதன்மையாகப் பேசுகின்றன. அத்துடன் நில்லாது. ஒவ்வொரு படத்திலும் அதன் வெவ்வேறு பண்பு விகசிப்புகள் எங்ஙனம் முதன்மை பெற்றுள்ளன, அதன் அழகியல் எக்கோணங்களில் வெளிப்படுகிறது, என்பன குறித்த ஆழ்ந்த துளாவல்கள் கட்டுரைகளுக்குக் கனம் சேர்க்கின்றன.

மிகுந்த தோழமை உணர்வுடனும் பெருமிதத்துடனும் எழுதப்பட்டுள்ளது, "மேடை ஏறாத மணிவிழாவும் மேடை பல கண்ட நாடகமும்" எனும் கட்டுரை! அண்மையில் மறைந்த குழந்தை சண்முகலிங்கம் அவர்களது நாடகப்பிரதியை அடிப்படையாகக் கொண்டு, ஹாட்லிக்கல்லூரி மாணவர்களைக் கொண்டு 1991இல் அரங்கேற்றப்பட்ட ஓர் ஆற்றுகை பற்றிய அறிமுகமும் இரசனைக்குறிப்புமாக இது எழுதப்பட்டுள்ளது. நவீன நாடக அரங்கின் நுட்பங்களை உள்வாங்கியவராக, வடமராட்சியில், பாடசாலை நாடகங்களையும் சிறுவர் நாடகங்களையும் தயாரிப்பதில் முன்னணியில் நிற்கும் திரு.பா.இரகுவரன் ஆசிரியரின் சிறந்த நெறியாள்கையில் இந்நாடகம் அரங்கேறியதாகவும் எம்.கே. குறிப்பிடுகிறார். இக்கட்டுரை எழுதப்பட்ட ஆண்டான 1991 என்பது, குழந்தை சண்முகலிங்கம் அவர்களது மணிவிழா ஆண்டு என்பதையும் ஆயினும் அது "மௌனமாகவே இசைக்கப்படுகிறது" என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

தொகுதியில் இறுதியாக இடம்பிடித்துள்ள கட்டுரை, மொழிபெயர்ப்பாளர் இரா.நடராஜனது "கறுப்பின அடிமையின் சுயவரலாறு" என்ற நூல் குறித்தது! "பிறக்கும்போதே அடிமையாகப் பிறந்தேன்" என, தனது வாழ்க்கை வரலாற்றை எழுதிய பிரெட்ரிக் டக்ளஸ் என்ற மனிதனது வாழ்க்கையே ஓர் இலக்கியம்! அவரது எழுத்துக்கள் வாசிப்போருக்கு ஆழமான வலியையும், கண்ணீரையும் வரவழைப்பது மட்டுமல்ல, மீண்டெழுதல் சாத்தியம் என்கின்ற நம்பிக்கையையும் விதைப்பன! ஓரிரு தசாப்தங்களுக்கு முன்னர் தினகரன் பத்திரிகையில் பிரட்ரிக் டக்ளஸின் எழுத்துக்கள் குறித்து, அப்பத்திரிகையின் ஆசிரியபீடத்தைச் சேர்ந்த அருள் சத்தியநாதன் எழுதிவந்ததை நாம் இங்கு நினைவுபடுத்தலாம். அடிமைச் சங்கிலிகளால், மானுடத்தின் குரல் எப்படியெல்லாம் நசுக்கப்பட்டது என்பதற்கான சாட்சியாக, அடக்குமுறையின் கோரமுகத்தை இரத்தமும் சதையுமாக எடுத்துரைக்கும் நூல் என்ற வகையில், இக்கட்டுரையை தமிழ்மொழியிலான வாசகருக்கான ஒரு முக்கியமான திசைகாட்டியாக நான் காண்கிறேன்.,

எம்.கே.யின் அழுத்தமான எழுத்து நடை, வாசகரைப் பிணித்து வைக்கவல்லது! அவரது திறனாய்வுப் பார்வையானது. அவரே கூறுவதுபோல. "வெளிப்பூச்சு முகமன் உறவின்" பாற்பட்டது அன்று! "ஒரு படைப்பாளிகூட சமூகத்தின் விமர்சகனே" என்றும் அவர் பிறிதோர் இடத்தில் குறிப்பிடுகிறார். சமூகம் பற்றிய கரிசனையும் அதன் போலித்தனங்கள் பற்றிய கொதிப்பும் பிரசவிக்கும் எழுத்துக்கள் தனித்துவமானவை! அவை சமூகத்தின் அடையாளங்கள்! அரங்கத்தில் அவை ஆற்றுகைகளாக உயிர் பெறுகின்றன. கல்லில் கலை வடிவங்களாக சாகாவரம் பெறுகின்றன. எமது மனவெளிகளில் அவையெல்லாம் ஏராளமான உணர்ச்சிகளை விளைத்து, உயிருடன் உலாவுகின்றன. சமூகம் மேன்மையான விடயங்களைத் தரிசிக்கவும், அவற்றை சரிவர அடையாளம் காணவும், அவற்றுள் தன்னைத்தானே கண்டுகொள்ளவும், பாலமாகத் திகழ்பவனே விமர்சகன். அவ்வகையில் எம்.கே. முருகானந்தன் அவர்கள் எழுதிக் குவித்தவை ஏராளம். அவற்றுள், "மறந்து போகக் கூடாத" காத்திரமான எழுத்துக்களில் சில இத்தொகுதியில் "மறந்து போகாத சில" என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன. இந்நூலும் மறந்துவிட முடியாத ஒன்றே!

மனிதனின் உயிர் காத்து வாழவைக்கும் பணி, மருத்துவர்களின் போற்றத்தகு பணி! படைப்பாளிகளின் எழுத்துக்களை சாகாமல் காத்து நூல்வடிவில் வாழ வைப்பதும் அத்தகையதொன்றே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பழந்தமிழ் இலக்கியங்களிலும், இதிகாசங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் நல்ல கருத்துகள் பலவும் பேராசிரியர் பண்டிதர், புலமை மிக்கவர்கள் மட்டத்துடனேயே நின்றுவிடுகின்றன. அக் கருத்துக்கள் பண்டைய இதிகாசங்களுடன் பரீட்சயமற்றவர்களுக்கு எட்டாக் கனிகளாகி விடுகின்றன. இத்தகு நிலையில். அவற்றை எளிமைப்படுத்தி நாட்டின் கடைக்கோடியில் குக்கிராமத்தில் வசிக்கும் பாமரர்களும் புரியும்படி எடுத்துச் சொன்னதிலேயே கவிஞர் கண்ணதாசன், சகலராலும் கவியரசராக கிரீடம் சூட்டப்பட்டார்.

அது போலவே மருத்துவம் சார்ந்த தகவல்களும் பெரும்பாலும் ஆங்கிலத்திலும் இணைய வெளியிலும் இருப்பதால்அவற்றை அடையப் பெறுவதில் பெரும்பாலோனோர் இடர்ப்படுவதுண்டு. இற்றைப்படுத்தப்பட்ட அத் தகவல்களை தம் வசமாக்கி சகலருக்கும் புரியத்தக்கதோர் மொழியில் எடுத்துரைத்தமையினாலேயே மருத்துவர் எம்.கே,முருகானந்தன் போன்றோர் மிகவும் முக்கியத்துவம் பெறலாயினர். துறை சார்ந்த அறிவு, மனித உயிரின் அறிவியல். சமூகவியல் சீர்மியம் போன்றவற்றிலுள்ள பிரக்ஞை, பிராந்திய மக்களின் கலை கலாசாரம் பற்றிய மிகு உணர்வு மொழியாற்றல் போன்றன நலவியல் சார்ந்த இத்தகு புனைவுகளுக்கு மேலும் வலுச் சேர்த்து அவற்றினை புதுவகை இலக்கியங்களாகப் பரிணமிக்கச் செய்தன.

மிகவும் சிக்கலான விடயங்களைக் கூட தான் கையாளும் எளிமையான அணுகுமுறை மூலம் இலக்குவாக்கி தனது நோயாளர்களை அல்லது வாசகர்களை அடையச் செய்யும்


# நலவியல் இலக்கியத்திலோர் புதுவகைப் புனைவு எம்.கே.முருகானந்தனின் டாக்குத்தரின் தொணதொணப்பு

## புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டாக்டரின் தொணதொணப்பு

முருகானந்தனது திறன் விதந்தற்குரியது. நோயின் தன்மைகளை அதன் தாக்கங்களை நோயாளிகள் அல்லது வாசகர்கள் விளங்கிப் பயனுறு வகையில் தன் துறை சார்ந்த பின்புலத்தில் நின்று கொண்டு உளவியல் தளத்தினூடு பரிகாரங்களை முன்வைப்பதாலேயே மக்களால் சிறந்த குடும்ப நல மருத்துவராக முருகானந்தன் கொண்டாடப்படுகின்றார், அவரது நூல்களும் விரும்பி வாசிக்கப்படுகின்றன.

பாலியல் நோய்கள், போதைப் பொருள் பாவனையின் விபரீதங்கள், எயிட்ஸ் நோயின் கொடூரம் முதலானவை பற்றிய எம்.கே,முருகானந்தனின் விழிப்புணர்வு மிக்க முன்னைய பதிவுகள் அறிவியல் சார்ந்த அவரது எத்தனிப்புகளின் அத்திபாரங்கள் எனலாம். போதனை மிக்க போக்குடன் தனக்கே உரித்தான அறிவியல் சார்ந்த மொழியின் வழி நின்று இவர் இயற்றிய இம் முயற்சிகள் நலவியலில் எழுத முனையும் ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் கவனக் குவிப்பிற்குள்ளாயிற்று.

இதன் தொடர்ச்சியாக முரசொலிப் பத்திரிகையில் தொடராக எழுதி வந்த "வைத்திய கலசம்" எனும் அறிவியல் பத்தி மக்களிடையே இன்றும் பரபரப்பாகப் பேசப்படுவதொன்றாகும். அதுவே சில காலங்களின் பின்னர் அதே மகுடத்தில் நூலாகவும் வெளி வந்திருந்தது. அன்றாடம் தான் சந்திக்கின்ற நோயாளர்களின் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து அவற்றிற்கான பரிகாரங்களை முன்நிறுத்தி கேள்வி பதிலாகவே அப் பத்திகளை அவர் வடிவமைத்திருப்பார். அவர் கையாண்ட அத்தகு அணுகுமுறையானது வாசிக்கும் அவரது நோயாளர்களை அல்லது வாசகரை நேரடியாகவே சந்தித்து சிகிச்சை தரும் இயல்பு உடையனவாக அமைந்திருந்தன.

முருகானந்தன் எழுதிய அறிவியல் சார் நூல்களுள் "தாயாகப் போகும் உங்களுக்கு" மிகவும் பிரசித்தமானது. கருவுற்றது முதல் குழந்தைப்பேறு வரையும் அதற்கு அப்பாலும் நிகழும் உடலியல் மாற்றங்களையும் அவ்வேளைகளில் வீட்டில் இருந்தவாறே கைக்கொள்ளத்தக்க பரிகாரங்களையும் உடனிருந்து சொல்வது போலவே அந் நூலினை அவர் யாத்திருப்பார். இளம் தாய்மார்கள் ஒரு கைநூலாகவே பயன்படுத்தி வரலாயினர். நான்கு பதிப்புகளைக் கண்டதோடு இலங்கை அரசின் சாகித்திய விருதினைத் தனதாக்கிய பெருமையும் இந் நூலுக்கு உண்டு. கொழும்பு மீரா பதிப்பத்து வெளியீடான எம்.கே,முருகானந்தனின் "நீங்கள் நலமாக" எனும் நலவியல் சார் பனுவல் ஐந்து பதிப்புகளிற்குள்ளானது என்பதும் பதிவு செய்யத்தக்கது.

நீரிழிவு, கொலஸ்ரோல். கண்நல விழிப்புணர்வு போன்றவை பற்றிய நூல்கள் உட்பட நலவியல் தொடர்பில் இதுவரை பதினான்கு புத்தகங்களை வெளிக் கொணர்ந்திருக்கும் மருத்துவர் முருகானந்தன் அண்மையில் ஜீவநதி பதிப்பகத்தினூடு "டாக்குத்தரின் தொணதொணப்பு" எனும் நூலினை அறுவடை செய்துள்ளார். இதே மகுடத்தில் ஜீவநதி சஞ்சிகையில் இவர் தொடராக எழுதி வந்த பதின்மூன்று பத்திகளும், சில வருடங்களுக்கு முன்னர் (2000-2015) கொழும்பில் மருத்துவப் பணியாற்றிய போது வீரகேசரி மற்றும் தினக்குரல் பத்திரிகைகளில எழுதிய பதினைந்து கட்டுரைகளுமாக மொத்தம் 28 ஆக்கங்ள் இந்நூலுக்கு அணிசேர்த்துள்ளன.

கேள்வி பதிலாக டயறிக் குறிப்புகளாக பத்தி எழுத்துகளாக சிறுசிறு கட்டுரைகளாக மருத்துவக் கருத்துக்களை வாசகர்களிடம் கொண்டு சேர்க்கும் முருகானந்தன் இந்நூலில் அங்கதத்தின் மூலம் தன் கருத்துக்களை பரவலாக்கம் செய்ய முற்படுகிறார். அங்கதம், ஏள்ளல்கள், நையாண்டிகள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளை பரப்புவதில் திரையுலகில் கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன் அடைந்த வெற்றி இவ்விடத்து மனங்கொள்ளத்ததக்கது. கடுமையான விடயங்களை மிக ஆழமாக மனதில் பதிய வைக்க அங்கதம் அருமையான தொரு தெரிவு என்பது இந்நூல் மூலமும் நிரூபணமாகிறது.

டாக்குத்தரின் தொணதொணப்பு என்ற நூலின் மகுடத்திலேயே அங்கதம் தொக்கி நிற்பது போல் மருத்துவர் கூற விளையும் ஒவ்வொரு அல்புனைவுகளிலும் மருத்துவக் குறிப்புகளுடன் அவரது நகையுணர்வும் நயத்தகு வகையில் கூடவே நகர்ந்திருக்கின்றது. இப் பண்பு அண்மைக் காலங்களில் (2020-2021)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று தூக்கலாகவே தெரிகிறது. மூச்சுத் திணறல், ஆஸ்த்மா, மார்பகப் புற்றுநோய், வாய்வுக் கோளாறு, சல அடைப்பு, நீரிழிவு, மூலவியாதி உட்பட ஏறத்தாள மனிதனைப் பீடித்திருக்கும் அத்தனை பிணிகளுக்கும் தீர்வையும் ஆலோசனைகளையும் முன்வைக்கும் ஒரு மருத்துவராகவும் சமூகம் சார்பில் அதீத கரிசனை கொண்டு விளங்கும் ஒரு சமூகவியலாளராகவும், உள வள ஆலோசனை வேண்டி நிற்போருக்கு நற்சீர்மிய ராகவும் திகழ்ந்து முருகானந்தன் இக்கட்டுரைகளைப் புனைந்திருப்பதாவது அறிவியல் சார் எழுத்துகளில் அவ் ஆளுமை அடைய இருக்கும் அடுத்த கட்டப் பாய்ச்சலுக் கான கட்டியம் எனலாம்.

"எனக்கு சாக ஏதும் மருந்து தாருங்கோ", "அம்மா வந்தாள் புதினமான கதையோடு". போன்ற அல்புனைவுகளில் எம்.கே.எம் எடுத்தியம்பிய விடயங்களுக்குமப்பால் சூசகமாக காட்டி சென்றிருக்கும் செய்திகள் ஏராளம் எனலாம். மேற்படி கட்டுரைகளிலும் மேலும் சிலவற்றிலும் மருத்துவர் முன்வைத்த அறிவியல் கருத்துகளை விட சமூகம் தொடர்பிலான அவரது கவலையும் கரிசனையுமே அதிகாரப் பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. "அம்மா வந்தாள் புதினமான கதையோடு" எனும் சம்பவத்தினை குடாநாட்டில் மேற் கிளம்பி வருகின்ற காலாசார சீரழிவின் வழியே வெளிப் படும் ஒரு அடையாளமாகக் கொள்ளலாம். "நான் பேச மொழியின்றி வாயடைத்து நின்றேன்." என்கிறார் நூலாசிரியர். வாயடைத்து நின்றது மருத்துவர் மட்டுமல்ல வாசகரும் தான்!

அந்தரங்க நோய்களை ஆபாசக் கலப்பின்றி அங்கதச் சுவையுடன் மருத்துவர் பதிவு செய்திருக்கும் முறைமை மேற்படி அல்புனைவுகளுக்கு புதிய பரிமாணங்களைத் தந்துள்ளன. வாலிபர்கள் பிரச்சனை யாகட்டும், யுவதிகளின் மருத்துச் சிக்கல்களாகட்டும் அவற்றினைக் கூறிய முறைமையில் நூலாசிரியர் கையாண்ட யுக்தியே இங்கு பிரதானமாகின்றது. "மஹாத்மா தனது வார்த்தைகளுக்காக மீண்டும் சத்தியாக்கிரகம் செய்திருப்பார்". "நான் அப்படியான பொம்பிளை எண்டால்", "எலி எலியைக் கடித்துவிட்டது" போன்ற கட்டுரைகள் அத்தகைய பண்புகளாலேயே வாசகர் கவனத்தை ஈர்ப்பனவாக அமைகின்றன.

கொடுத்த மருந்துகளை ஒழுங்காகப் போடாது வைத்தியர்களுக்கே பாடம் எடுக்கும் மருத்துவ மேதாவி களையும், இயலாத பெற்றோரைத் தனியாக மருந் தெடுக்க அனுப்பும் பிள்ளைகளையும் கண்ணுறுகை யில், "தன் மொட்டந் தலையே பற்றி எரிவதாக" கடும் சினமுற்று மருத்துவர் தொணதொணப்பதினை எவரும் இலகுவில் கடந்து செல்லமுடியாதுள்ளது. "கடவுளிலும் மேலானவர்கள்", "தேவார மழை", போன்ற கட்டுரை களில் மருந்து மாத்திரைகளுக்கு அப்பால் மதம் சார்ந்த நம்பிக்கைகளும் நோயாளர்களைக் குணமாக்கும்



அற்புதங்களை ஆணித்தரமாக எடுத்துப் பேசுகிறார். "காணமால் போன வேட்பாளர்கள்", "இரவிரவாகப் படித்தும் பரீட்சையில் கோட்டை", "ஆஸ்த்மாவும் மதுவும்" போன்ற சித்தரிப்புகள் நூலின் நுழைவாயிலில் நின்று நண்பர் இ.து.குலசிங்கம் பேசுவது போல் வெறும் கற்பனைப் புனைவுகள் அல்ல. காத்திரமான அனுபவ வெளிப்பாடுகளே!

இவ்வாறாக ஒவ்வொரு தொணதொணப்புகளும் ஏதோ ஒரு வகையில் சகலரது வாழ்வியலுக்கு ஒப்ப இயைந்ததே. அந்தப் பொருத்தப்பாடுகள் வாசகர் களுக்கு அளிக்க வல்ல படிப்பினையே மருத்துவர் முரு கானந்தனின் தொணதொணப்பிற்கு கிடைக்கும் வெற்றி யெனலாம்.

பல புதிய முயற்சிகளை முன் னெடுக்க மருத்துவரின் மருந்து மாத்திரைகள் மட்டு மல்ல இத்தகு தொணதொணப்புகளும் புத்தூக்கம் தரும்.

அறிவியல் கருத்துக்களை புனைவுடன் கலந் துரைக்கும் இந்தப் பண்பு ஒரு அபாயம் நிறைந்த அணுகு முறையாகும். சமநிலை சற்றுத் தவறின் நடைச் சித்திரமாகிவிடும். ஆனால் மருத்துவர் முருகானந்தன் மருத்துவக் கருத்துக்களை வெகு அற்புதமாகவே இலக்கியமாக்கியுள்ளார்.

அறிவியலும் புனைவும் இவரது படைப்புகளில் சரிநிகர் சமனாய் அமைந்து புதுவகைப் புனை வொன்றிற்கு இவரை இட்டுச் சென்றிருக்கின்றன. அறிவியல் எழுத்துக்களின், குறிப்பாக நலவியல் துறையில், ஒரு புதிய அத்தியாயத்திற்காக ஆரம்பமாக டாக்டர் எம்.கே.முருகானந்தனின் இத் தொணதொணப்பு அமைந்துள்ளதுஎன மிகத் தாரளமாகக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எம்.கே.முருகானந்தனின் காட்சிக் கவி முகதரிசனமாய் "மறந்து போகாத சில..."ஒரு கவிநய நோக்கு

புலோலியூர் வேல்நந்தகுமார்

எமது மண்ணில் நிலவும் நீண்ட வைத்தியரே இலக்கியம் படைக்கும் பாரம்பரியத்தின் நீட்சியாய் சமகால சாட்சிகளில் ஒருவராய் எம்மத்தியில் பவளவிழாக் கண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர் வடமராட்சி வியாபாரிமூலை மண்ணை பூர்வீகமாகக் கொண்ட வைத்தியர் எம்.கே.முருகானந்தன் அவர்கள். மென்மையும் பணியும் அடக்கமும் ஓயாத தேடலும் மாற்றங்களுக்குள் தன்னைப் பொருத்திக் கொள்வதும் அவரது அடையாளங்கள். பாரதியின் ஞானகுருவெனப் போற்றப்படும் அருளம்பல சுவாமிகளை தந்த மண்ணில் குழந்தைக்கவிஞர் யாழ்ப்பாணனைத் தந்த மண்ணில் தோன்றியவர் இவர். இவரது ஊரும் எனது ஊரும் அயல் அயல் ஊர்கள் என்ற வகையில் சிறுவயது முதலே நான் இவரை அறிவேன். எனது அம்மம்மா நல்லம்மா ஆசிரியையிடம் யா/ மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வி கற்றவர். யா/ஹாட்லிக் கல்லூரியில் தன் உயர்கல்வியைத் தொடர்ந்தவர் இவர். மருதடியில் அமைந்துள்ள இவரது மருந்தகத்துக்கு சிறு வயது முதலே அடிக்கடி சென்றிருக்கின்றேன். நோயாளிகளுடன் அன்பாக பேசும் இவரது உரையாடல்களே நோய் தீர்க்கும் மருந்தாக அமைந்ததை உணர்ந்திருக்கின்றேன். அவ்வகையில "தாயாகப் போகும் உங்களுக்கு" உட்பட மருத்துவ அறிவியல் நூல்களை தந்த இவரிடமும் ஒரு ஆழமான பன்முகம் கொண்ட இலக்கியப் படைப்பாற்றலும் இருந்திருக்கிறது என்பதை ஏற்கனவே மல்லிகை உள்ளிட்ட சஞ்சிகைகளில் இவர் எழுதிய எழுத்துக்கள், சினிமா ரசனைக் குறிப்புகள், அறிவோர் கூடற் செயற்பாடுகள் இணைய முகநூல்வெளி படைப்புகள் வழியாக அறிந்திருந்தாலும் இவரது டாக்டரின் தொணதொணப்புகள் உட்பட ஜீவநதி பரணீதரனின் முயற்சியால் சென்ற ஆண்டு வாசிப்பு மாதத்தில் வெளியிடப்பட்ட இவரது ஐந்து நூல்கள் வழியாக பின்னர் ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் அதன் வெளியீட்டின் வழியாக இவரது படைப்பாளுமையின் பன்முக தரிசனத்தை எம்மால் கண்டு பூரிப்பும் வியப்பும் அடைகிறோம்.

அவ்வகையில் இவரது கவிதை முக தரிசனத்தை ஏற்கனவே சில பத்திரிகை சஞ்சிகை முகநூல் படைப்புகளாக தரிசித்து இருந்தாலும் அவற்றையெல்லாம் மறந்து போகாமல் தேடித் தொகுத்ததன் வெளிப்பாடே ஜீவநதியின் 411 ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள "மறந்துபோகாத





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில…" என்ற இக்கவிதைத்தொகுப்பாகும். இவரது இத்தொகுப்புகான பின்னட்டைக் குறிப்பை வரைந்துள்ள படைப்பாளர் அ.பௌநந்தி அவர்கள் "இயற்கை வழி மரபும் நவீனமும் கலந்த இவரது கவித்துவத்தை எடுத்துக் காட்டிள்ளார்.

இனி இப்பிரதிக்குள் நுழைந்து இவரது கவித்துவ வெளிப்பாடுகளை தரிசிப்போம். இத்தொகுப்பில் இவரது அறுபது கவிதைகள் தொகுக்கப் பட்டுள்ளன. நீண்ட கவிதைகள் குறுகிய கவிதைகளாக இவை அமைந்துள்ளன.இவரது கவிதை தொகுதியின் சிறப்புகளை அதன் வடிவம் சார்விடயங்களை எடுத்துக் காட்டி இவரது கவிமுக தரிசனத்தை நிகழ்த்தலாம் என எண்ணுகின்றேன். ஒரு கவி கவுக்கப்பட்ட குடைக்குள் தேங்கிய நீரில் பயணிக்கும் காகிதக் கப்பல் என்ற அட்டைப்படமே கவித்துவமானதாக அமைந்து பல அர்த்தங்களைச் சிந்திக்க வைக்கிறது. இத்தகைய சிறப்பு மிக்க அட்டைப்பட வடிவமைப்புகளை தொடர்ச்சி யாக தான் வெளியிடும் நூல்களில் வெளிப்படுத்தி வரும் பரணீக்கு வாழ்த்துகள்.

என்னுரையில் டொக்டர் அவர்கள் மறந்து போகாத சில என தான் வைத்திருந்த வலைப்பூ பற்றியும் தனது குஞ்சி மாமா வைத்திருந்த கமரா பற்றிம் தன்னிட மிருந்த கமரா பற்றியும் குறிப்பிட்டு பின் கைத்தொலை பேசி காலத்தில் இயற்கையின் படங்களை எடுத்து முகநூலில் பதிவேற்றிய போது அப்படங்களுக்கு கீழ் சில மனக்கருத்துக்களை எழுதத்தொடங்கியபோது அதற்கானதான கவிதை வடிவத்தை தேர்ந்தெடுத்ததை யும் ஆனால் இவற்றைத்தான் கவிதைகள் என ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் கூறியுள்ளார். இவ்வகையில் இவரது கமராக் காட்சிகளே கவிதைகளுக்கான அடிப்படையாக அமைந்துள்ளதையும் இயற்கை மீதான நேசிப்பும் இதற்கு துணை நின்றதையும் இத்தொகுப்பு கவிதைகள் வழி எம்மால் தரிசிக்க முடிகிறது. அவ்வகை யில் இந்நூலிலும் அப்படங்களுக்கு கீழாகவே கவிதை கள் இடம்பெற்றுள்ளன. அவ்வகையில் இற்கையுடன் இனிய காலை வணக்கம் என்பது முதற்கவிதை. அதில்,

இயற்கையின் தீந்தை வரைவு
அழகு
மப்பும் மந்தாரமுமாக
புலர்ந்தது
காலைப்பொழுது

எனத்தொடங்கி இடையிலே இயற்கை ஒலிகள் தரும் இன்பங்களைக் கூறி

இயற்கையைப் பாதுகாப்போம்
கையளிப்போம்
வருங்கால சந்ததியினர்
கைகளில்
சிதைக்காமல் சீரழிவின்றி"

என்று முடிக்கின்றார்.

தொடர்ந்து வரும் கவிதைகள் "மரத்தில் பழுத்துத் தொங்கும் மாம்பழம், மலர்கள், தண்ணீர்ப் பூச்சி, சூரியன் என்றவாறு இயற்கையின் தான் கண்ட அல்லது படமெடுத்து காட்சிகள் மீது தன் மனதை பறிகொடுத்து தன்மனக்கருத்தை வெளிப்படுத்திய கவிதைகளாக அமைந்து சிறப்புப் பெறுகின்றன.

வெம்பிப் பழுத்தவை
நிரம்பிக் கிடக்கின்றன ஊர் தோறும்

எனத் தொடங்கி

வெட்டிப் பேச்சு புட்டித்துரவம்
அவர் நீளும்
உடம்பு வளையாது…

என வெளிநாட்டுக் காசில் நெறிபிறழ்ந்து நடக்கும் இளையோரின் போக்கை வெம்பல் மாம்பழத்துக்கு ஒப்பிட்டு எம்மை சிந்திக்க வைக்கிறார். மிக எளிமையான கவிதைகள். முடிக்கும்போது இப்படியே போனால்

"இந்த மண்ணும்
இனியமொழியிலும்
காணாமற் போனோர்
பட்டியலில் சேரும்…

என இன்னொரு பரிமாணத்தில் கூறி முடித்துள்ளமை சிறப்புக்குரியது. காலத்தால் கருகாதது என்ற கவிதையில்

"நேசம்
சொற்களாக சிந்தாத போதும்
கவிதை ஊற்றெனப்
பெருகிப் பாய்ந்தது
கண்களில் உண்மை…



என தன் கவிமொழியால் மரபுகடந்து எம்மை வியக்க வைக்கிறார். முதுமை யிலும் எண்ணிப் பார்க்கும் மறக்க முடி யாக் காதலையும் மலர்களின் அக மௌனப்பேசி மெல்லிய வருடலை சொற் களால் ஏற்படுத்தும் வித்தையை இக் கவிதை மெய்ப்பித்து நிற்கின்றது.

தண்ணீர்ப் பூச்சி கவிதையில் ஒரு சிறுவர் பாடல், நாட்டார் பாடல் தன்மையை இனங்காண முடிகின்றது.

தண்ணீரில் நடந்து வாறார்
தத்தளிப்பு சற்றுமின்றி

என அக்கவிதை தொடங்குகின்றது

பின் ஒரு வரியில்
வீட்டுவாளி நீரிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளிப்பார்.

என்றவரி ரசனைக்குரியது. வைத்தியருக்கே உரிய கூர்ந்த அவதானிப்பு இன்றி இத்தகைய காட்சிக் கவிதைகளைப் படைக்க முடியாது. இதேபோல சோர்வு கொள்ளும் ஆதவன் என்ற கவிதை மீனவனின் உழைப்புக்கான தலை வணக்கமாய் அமைகிறது.

பிழை சொல்லல் ஆகாது தாத்தா என்ற கவிதை பொய் சொல்லக் கூடாது பாப்பா என்ற கவிதை பொய் சொல்லக் கூடாது பாப்பா என்ற பாரதிகவிதையின் மறு தலையாய் பேரப்பிள்ளை தாத்தாவுக்கு சொல்லும் பாங்கில் வித்தியாசமான எடுத்துரைப்பு முறையுடன் படைக்கப்பட்டுள்ளது.



கொரோனா வைரஸ் பற்றி மற்றொரு கவிதையில்

"மூடன் நான்தான்
கைபேசிக் கமராவுடன்
குளோசப் கிளிக்கெடுக்க
குளோசாகப் போனேன்
குளோசாகிப் போவேனா

என தனது கமராக் கவிதையைப் பதிவு செய்கிறார்.

ஓட்டம் ஏன்
என்ற கவிதையில்
"முள்ளிவாய்க்காலில்
தொலைத்த உறவை
முடிவிலாத தேடலில்
நீரும் தொலைந்து
போகீரா?..."

என நவீன தற்குறிப்பேற்றத்தைக் கையாள்கின்றார்.

மறதி என்ற கவிதையில்
மறக்க வைப்பது
நோய் எனும்
அரக்கன் அல்ல
நொந்த மனதையும்
ஆற்றுப்படுத்தும்
ஔடதம்
இயற்கை அளித்த
கொடை மறதி"

என வித்தியாசமான முறையில் எடுத்துரைத்துள்ளார். சோழகக் காற்று பற்றிய கவிதையில்

புழுதி மழையில்
பொன்னாடை சூடித்
திணறும் பூமி

என வித்தியாசமான கற்பனையை கையாண்டுள்ளார்.

ஆடிக்கூழ் பற்றிய கவிதையில்,
ஆடிக்கூழுடன் காலை புலர்ந்தது.
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே

என புதிய சிந்தனைக்கு உட்படுத்தி புதிய மெட்டில் பாடுகிறார்.

மயிர்க்கொட்டியின் நடை அழகைக் கூறி,
எடை பெருத்து
பிணியாகும் மாந்தர்கள்
படித்திடனும் பாடம்
விரைவான
உன் நடையில்

என மருத்துவ அல்லது உடல் ஆரோக்கிய விடயம் ஒன்றை இயற்கையுடன் பொருத்திக் கூறும் இவரது கவிதை நடையும் அழகுதான். இன்னொரு இயற்கை காட்சி பற்றிய கவிதையில்

"தென்னையும் பனையும்
நெடு வளர்ந்து
வேம்புடன் இணை சேர்ந்து
வான் அளையக் கைநீட்டும்
விசில் ஊதப்
பூவரசு சிரமைத்து
வரவேற்கும்

என வித்தியாசமான கற்பனையோடு கூடியவர்ணனை சிறப்பானதாக அமைந்துள்ளது.

பசுப்பால் குடித்த நினைவுகளை மூன்று கால வேறுபாட்டுக்கு அமையச் சொல்லும் கவிதையில் இறுதியில்

"இன்று
உடல் வளைத்து இவளெழுந்து
ப்ரிச் திறக்க
குளிலுறைந்த
பால் பைக்கற்றின்
ஐஸ் உருகும்
சுடுவெயில் மேல் தழுவ
என் குறட்டை
ஊரெழுப்ப சங்கூதும்
அந்நேரம்..."

என கால மாற்றத்தை சமூக எள்ளலோடு பேசியுள்ளமை சிறப்புக்குரியது. ஆடி அமாவாசை விரதத்தை அப்பாவின் நினைவுகளோடு இணைத்துப் பேசும் கவிதையில்

"நிலவு ஒழிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வானம் கறுத்தநாள்
அப்பிக் கிடக்கும்
காரிருள்..."

எனத்தொடங்கும் வர்ணனையும் இறுதியில்,

"காத்திருக்கின்றன
கடமைகள்
பிள்ளைகளுக்கு
விரதம் இருந்து
துதிப்பதைவிட
வாழும்போதே துயருறாமல்
காப்பதற்கு..."

என்ற அறிவுரையும் சிறப்பு. இன்னுமா குழல் ஊதி மகிழ்கிறாய் என்றகவிதை இயற்கை அழிவுகளுக் குள்ளும் தன் செயற்பாட்டை சொல்லும் தாவரம் ஒன்றின் மீதான ஏக்கத்தை வெளிப்படுத்தப்படுகிறது. "அப்பாவை காத்திருத்தல்" என்ற கவிதையில் மரணித்த தன் தந்தைக்கு கொள்ளி வைத்த அவலத்தை மனதை உருக்கும் வகையில் தன் தந்தை பற்றி நினைவுகளோடு இணைத்துக் கூறியுள்ளமை நெஞ்சைப் பிழிகிறது.

பட்டிப்பூ பற்றிய கவிதையில், அது வீட்டுக்கு கூடாக என்ற மூட நம்பிக்கையை தகர்த்து அதன் மருத்துவச் சிறப்புகளை வெளிப்படுத்தியுள்ளார்.

" மறை நோயாம் குருதிப் புற்றுக்கு
இதன் சாற்றில் பொடித்தெடுத்த
வின் கிரஸ்டின் அருமருந்தாம்
வெளிநாட்டார் கண்டறிந்தார்
நீரிழிவுக்கு சொன்ன மரந்தென
எம்மூர்ப் பரிகாரியும்
பகருகிறார்..."

என்ற வரிகள் வழி இதனை அறியலாம். கூடிக்களிப்பது என்ற கவிதையில் நல்ல இன்பங்களும் வாழ்வில் பின்பற்றக்கூடாத இலக்கிய உலகின் இன்பங்களையும் எடுத்துக் கூறியுள்ளார். இதே போல பனங்கொட்டை முளைவிட்டு வடலியென என்ற ஜீவநதியில் வெளிவந்த இவரது கவிதையில்

"சிறு நண்டு மணல் மீது
படம் ஒன்று கீறும்..." என்ற மகாகவியின் கவி யோசைச் சாயலை இனங்காண முடிகிறது. இதேபோல சுதந்திரத்தின் மேலான சுகம், வர்க்க பேதமில்லாப் பூக்களின் சாம்ராஜ்யம் போன்ற கவிதைகளும் தம்மள வில் அதன் சொல்முறையில் சிறப்புப் பெற்று விளங்கு கின்றன மற்றொரு கவிதையில்

"ஆறுமுகம் குடா எமது கடலோரம்
அறுகம்பே ஆன செய்தி தெரிந்தபோது
களி கொண்டெழுந்த சூரியன்
துயர் மூழ்கி ஒளிந்து கொண்டான்..."

என நில ஆக்கிரமிப்புக்கு எதிரான தனது குரலை பதிவு செக்கிறார். வெளிச்சவீடு, வாக்களித்த அனுபவம், தைப்பொங்கல், இளமைக்காதல், தாய்மையின் துயரம், புத்தாண்டு, எரியுண்ட யாழ் நூலகம், நுளம்பு, மூதாதையர் பாதையில், நோயற்றவாழ்வு, காணாமல் போனவரை தேடும் துயரம் என பல்வேறுபட்ட பாடு பொருள்கள் சார்ந்து இவர் தந்துள்ள கவிதைகளும் இவரது கவிமுக தரிசனத்தை கவிஞனின் அக தரிசனமாய் எமக்கு தருகின்றன. முகநூல் வெளியில் இத்தகைய கவி முயற்சிகள் தொடர வாழ்த்தி டொக்டரின் பன்முக இலக்கியப் பணிக்கு தலை வணங்கி இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## இப்படியும் பார்க்கலாமா அறிவியலை என்ற கேள்விகளுக்கு விடை பகரும் "மலைப்பூட்டும் மருத்துவ அறிவியலை அறிந்து கொள்வோம்"

■ கே.எம்.செல்வதாஸ்

ஈழத்துத் தமிழ்ப்பரப்பில் மருத்துவம் -இலக்கியம் என்னும் இரு தளங்களில் ஆழத்தடம்பதித்த டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்களுடைய இலக்கியம் கலந்த மருத்துவ அறிவிலைக் கூறும் படைப்பாக "மலைப்பூட்டும் மருத்துவ அறிவியலை அறிந்து கொள்வோம்" எனும் தொகுதி காணப்படுகின்றது. குடும்ப மருத்துவர் என்னும் சொல்லாடலால் அடையாளம் பெற்ற டாக்டர் அவர்களது குறித்த தொகுதியில் மொத்தம் பதினெட்டுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரை களும் பல்வேறு செய்திகளை சமூகத்துக்கு எடுத்துக்கூறி நிற்கின்றன. இப்படியும் இருக்குமா? என்று ஆச்சரிப்பட வைக்கும் விதத்தில் கட்டுரைகள் யாவும் அமையப்பெற்றுள்ளன. கட்டுரைகளுக்கான தனித்துவத்தை கையாளப்பட்டிருக்கின்றன. கட்டுரைகளுக்கான தனித்துவத்தை கைாளப்பட்டிருக்கின்ற மொழிநடை வழங்கி நிற்கின்றது. அறிவியல் -இலக்கியம் என்னும் இருதுறைப் பணியாக டொக்டர் அவர்கள் காணப்படுவதால் இயல்பாகவே கட்டுரையெங்கும் இலக்கியத்தின் செல்வாக்கு நிறைந்து காணப்படுகின்றது. அறிவியலுக்கும் மனிதர்களுக்கும் இடையில் இருக்கின்ற புரியாத மொழித் தன்மையினை இவரது எழுத்துக்கள் குறைந்து நிற்கின்றன. சொல்லவந்த செய்தியை எளிமை ததும்பும் அதே வேளை மிக ஆழமான விதத்தில் எடுத்துரைத்திருப்பது தொகுப்பிற்கான தனித்துவமாகக் காணப்படுகின்றது.

"காதலுக்கும் கவர்ச்சிக்கும் அப்பாலும் உதடுகள்" என்னும் முதலாவது கட்டுரை,இதுவரை காலமும் உதடுகளுக்கு கொடுக்கப்பட்டிருந்த பெறுமானத்தை இன்னும் இரட்டிப்பாக்கி பலரும் அறிந்து கொள்ளாத அறிவியல் புதிரை மிக இலாவகமாக எடுத்துக் கூறிச் செல்கின்றது.

"அண்மைக்காலங்களில் உதடுகள் படைப்பாளிகளுக்கு அப்பால் பல்வேறு தரப்பட்டவர்களைக் கவர்ந்திழுக்கத்தொடங்கியிருகிறது. விஞ்ஞானிகள், நீதித்துறை, சட்ட மருத்துவர்கள், ஏன் கடுகடப்பான போலீஸ் காரர்களையும் தான். துப்புத் துலங்காத கொலை வழக்கில் குற்றவாளியைக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடிப்பதற்கும் இது உதவியாயிருக்கிறது…"

"உதடுகள் இரகசியம் பேசவல்லன. பேசும் அந்த உதடுகளிலும் பல பேசாத இரகசியங்கள் இன்னமும் ஒளித்து மறைந்துள்ளன…"

என்று கூறுமிடத்து அறிவியலை கண்டு மனங்கள் தாமாகவே வியப்புக் கொள்கின்றன. இவற்றுக்கப்பால் டாக்டர் அவர்களுடைய இலக்கியத் தனமான அறிவியல் நடை அற்புதம் மிகுந்ததாக காணப்படுகின்றது.

"காதலும் காமமும் சாதலும் மனிதனிலும் மிருகங்களிலும்" எனும் கட்டுரை,

'கதல், காதல் காதல்
காதல் போயின் சாதல்…"

என்னும் பாரதியின் அடிகளை முன்னிறுத்தி ஆரம்பம் கண்டு காதலின் பல்பரிமாணங்களை தொட்டுச் செல்வதாக படைக்கப்பட்டிருக்கின்றது.

"காதல் என்பது மனித இனத்திற்கும்
மட்டும் சொந்தமானது அல்லவே
விலங்குகள், பறவைகள், பூச்சி, புழுக்கள்
யாவுமே காதலில் மகிழவே செய்கின்றன"

என்று எழுதும் டாக்டர் அவர்கள். சமுதாயம் உணர்ந்து கொள்ள வேண்டிய பல செய்திகளைச் சொல்லிச் செல்கின்றார்.

"பிறக்கப் போகும் தன் மகளின் நலத்திற்காக,
தான் புணர்ந்தவுடனேயே தன்னைப்
பலிகொடுக்கும் தாராள சிந்தனைஎந்தி
மனிதனுக்கானது வருமா?

தன்னுயிரை பலி கொடுக்க வேண்டும்
என்றில்லை. தன் உறவுகளை தனது
சமூகத்தை, சூழலை, இயற்கையை
அழிக்கும் செயற்பாடுகளில் இறங்காமல்
இருத்தலே போதுமானது"


என்று ஆழமான சிந்தனைக் கிளறலைத் தோற்றுவிக்கச் செய்யும் பாங்கு அற்புதமானது.

ஒரு பெண் எவ்வாறு வாடகைத்தாய் ஆகின்றாள் என்பதையும் அத்தகைய நிலைக்கு பெண்களைத் தள்ளும் சமூகப்பொருளாதார நிலைமைகளையும் மருத்துவ உலகில் நடைபெறும் சில தவறான நடைமுறைகளையும் எடுத்துரைப்பதாக "வாடகைத்தாய் மார்கள்" எனும் கட்டுரை காணப்படுகின்றது.

"தாயின் ஆரோக்கியத்தை விட பணத்தை
மட்டும் குறியாகக் கொண்டு இயங்கும்
இந்தத் தொழிலானது சட்டங்களின்
கைகளில் அகப்படுவது இல்லையென்றே
சொல்லலாம்…"

எனும் அடிகள் சொல்லிச் செல்லும் செய்தி கனதியானது. சிரிப்பை சிந்திக்க வைக்கும் வகையில் "முகத்தில் சிரிப்பு மூளையின் தெறிப்பு" எனும் கட்டுரை பல்வேறு ஆய்வுமுறைகளை முன்னிறுத்தி எழுதப் பட்டுள்ளது.

"சிரிப்பு என்பது சொற்களின் பங்களிப்பற்ற
மனிதத் தொடர்பாடலின் ஒரு வடிவம்



எனலாம்…"

"சிரிப்பானது மனதையும் உடலையும்
வலிமைப்படுத்தி புத்துணர்வுடன்
வைத்திருக்கும்"

என்றவாறான விபரிப்புகள் சிரிப்பின் பின்னே ஒளிந்திருக்கும் பல்வேறு இரகசியங்களை சமூகத்தின் கண்களுக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கின்றன.

எதிர்கால உலகில் கணினி வலைப்பின்னல் அமைப்புப்போல மூளைகளின் நெட் உருவாக்கப்படுவதற்கான சாத்தியங்கள் நிலவுவதை "உயிரியல் கணினி சாத்தியமாகும்" எனும் கட்டுரை பேசி நிற்கின்றது.

"அலட்சியம் செய்ய முடியாத சத்தம்
குழந்தையின் அழுகுரல் மட்டும்…"

எனும் கட்டுரை குழந்தைகளின் அழுகுரலுக்குள்ள வலிமை எத்தன்மையானது என்பதனை எடுத்துக்கூறி நிற்கின்றது.

"குழந்தையின் அழுகைச் சத்தம் மிகவும்
வீரியம் மிக்கது. ஒரு தியேட்டரில்
படம் பார்த்துக் கொண்டிருக்கும்போது,
கடற்கரையில்
காற்று வாங்கிக்
கொண்டிருக்கும்போது அல்லது
பஸ்ஸில் பிராயாணம் செய்து
கொண்டிருக்கையில்
திடீரென ஒரு குழந்தையின் வீறிட்டு அழும்
சத்தத்தைக் கேட்டால் யாராலும்
அதை அசட்டை
செய்ய முடியாது. செய்யும் காரியத்தை
பட்டெனக் கைவிட்டு என்னவாயிற்று எனப்
பார்க்கத்தூண்டும். ஏதாவது செய்ய வேண்டும்
என ஓடிச் சென்று உதவ முற்படும்"

எனும் விபரிப்புகள் சான்றாகமைகின்றன.

இவ்வாறான அமைப்பெற்றுள்ள கட்டுரைகள் யாவுமே கனதியான பல செய்திகளை சமூகத்துக்கு சொல்லிச் செல்வதோடு அறிவியலில் இலக்கியத்தை கலந்து புதிய நெறிமுறைக்கு இட்டுச் செல்லும் பாங்குடையனவாக அமையப் பெற்றிருப்பது கவனத்திற்குரிய ஒன்றாகக் காணப்படுகின்றது. மனித சிந்தனைக் கோலத்தை புதிய செல்நெறியில் மடைமாற்ற வல்ல எழுத்துக்களாக டாக்டர் அவர்களுடைய எழுத்துகள் அமையப் பெற்றிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி நான் என்ன செய்ய?



"லொள் லொள், லொள்"

நாயளின்ரை விடாப்பிடி யான தொடர்ச்சியான குலைப்புச் சத்தம், ஆழ்ந்த நித்திரையில் இருந்த என்னை எழுப்பி விட்டது. எழும்பிப் பாத்தால் எங்கையும் ஒரே கும்மிருட்டு.

"நேரம் என்ன இருக்கும்"

ஏ.எல் சோதினை வாறபடியால் வெள்ளன எழும்பிப் படிக்கோணும் எண்டு ஐஞ்சு மணிக்கு எலாம் வச்சனான். மணி இன்னம் அடிக்கயில்லை. தலை மாட்டுக்கை வைச்சிருந்து டோச் லைட்டை எடுத்து அடிச்சுப் பார்த்தால் நேரம் நாலரைதான்.

என்னவாயிருக்கும் நாயள் இப்படி விடாமல் குலைக்குதுகள் எண்டு யோசிச்சபடி திரும்பிப் படுத்தன்.

நாயளின்ரை குலைப்பு கிட்ட கிட்ட வாற மாதிரிக்கிடக்கு. காதைக் குடுத்து கவனிச்சுக் கேட்டால் ஏதோ பெரிய வாகனங்கள் உறுமுவது போலை சத்தம் மெல்லிசாக் கேட்டது.

"ஐயையோ அவங்கள் வாறாங்கள் போலை கிடக்கு"

ஆக்கம் பக்க ஊரிலை எல்லாம் இப்படி முந்தி நடந்ததெண்டு கூடப் படிக்கிற கேர்ல்ஸ் சொல்லி யிருக்கினம்.

விடியக்க முந்தி வந்து ஊரைச் சுத்தி வளைச்சுப் போடுவாங் களாம். பிறகு சோதிக்கிறம் எண்டு சொல்லி வீடுவீடாக உள்ளிட்டு, இருக்கிற இளந்தாரிப் பொடி யளை எல்லாம் பிடிச்சுக் கொண்டு போடுவாங்களாம். சிலவேளை பெட்டையளோடை சேட்டையும் விடுவாங்களாம்.

சோதிச்சுப் போட்டு அவங்கள் போனாப்பிறகு பாத்தால் வீட்டிலை கிடந்த விலையான சாமான்கள், நகை நட்டு எல்லாம் சிலவேளை காணாமல் போயிருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாம். ஆக்கள் சூடு பட்டு செத்தும் இருக்கினமாம்.

இண்டைக்கு எங்கடை ஊரோ? எனக்கு நெஞ்சு திக்கெண்டது.

ஐயாவும் அம்மாவும் வீட்டிலை இல்லை. கலியாணச் சடங்கு ஒண்டுக்காக ஊறணி போட்டினம். நாளைக்குத்தான் வருவினம். அண்ணையும் நானும்தான் வீட்டிலை தனிய.

அண்ணையைக் கண்டால் விடாங்கள். ஏ.எல் இரண்டாந் தரம் எடுக்கிறான். நல்ல வாட்டசாட்டமான பொடியன். கட்டாயம் சமுசயப்பட்டு பிடிச்சுக் கொண்டு போடுவாங்கள். அவனை எழுப்பி எங்கையெண்டாலும் கலைக்க வேணும்.

"அண்ணை அவங்கள் வாறாங்கள் போலை... கெதியா எழும்பு"

திடுக்கிட்டு எழும்பின அவனும் சத்தத்தை அவதானிச்சுக் கேட்டுப்போட்டு "ஓமோம் அவங்கள்தான்" என நிச்சயப்படுதினான்.

"இப்ப என்ன செய்வம்"

"அண்ணை பொடியளின்ரை நோட்டிஸ் ஏதெண்டாலும் கிடந்தால் எடுத்துத் தா"

"அவ்வளவா ஒண்டும் இல்லை. நேற்று முந்தாநாள் கிடைச்ச ரண்டு மூண்டுதான் கிடக்கு.. இந்தா பிடி. இதுகளை என்ன செய்யப் போறாய்"

"தேத்தண்ணிக்கு அடுப்பு மூட்டறதுபோலை, அடுப்பில போட்டு விறகோடு விறகா எரிப்பம். தனிய எரிச்சதைக் கண்டால் சந்தேகப்படுவாங்கள்."

".. சரி அண்ணை நீ எங்கையெண்டாலும் ஓடித் தப்பு. இஞ்சை நிண்டால் பிடிச்சுப் போடுவாங்கள்."

"ஐயாவும் அம்மாவும் இல்லை. உன்னைத் தனிய விட்டிட்டு என்னெண்டு போறது. நடக்கிறது நடக்கட்டும். பேசாமல் இருப்பம்."

இடையிடையே ஒண்டு ரண்டு வெடிச்சத்தங் களும் கேட்டுது. பொழுது வெளிக்கத் தொடங்கியது.

"பாத்தியோ ஆரையோ சுடுறாங்கள். வெளி யாலை போனால் ஆபத்து. சுட்டாலும் சுட்டுப் போடுவாங்கள்"

ஊரே மயான அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. கனமான பூட்ஸ் சத்தங்களும் துவக்கு வெடிச் சத்தங் களும் கேட்டுக் கொண்டிருந்தன. மரணபீதியுடன் வீட்டுக்கை அடைஞ்சு கிடந்தம்.

நேரம் பத்து மணியாகிவிட்டது.

பக்கத்து வீட்டு மதில் பக்கம் ஆரோ குதிக்கிற மாதிரிச் சத்தங் கேட்டு யன்னல் ஓட்டையுக்காலை எட்டிப் பாத்தன். ஐஞ்சாறு காக்கிச் சட்டைக்காரங்கள் யந்திரத் துப்பாக்கிகளோடை எங்கடை வளவுக்குள்ளை வந்திட்டாங்கள்.

"கௌத அத்துல" எண்டபடி வீட்டுக்கதவை கதவை காலால் அடித்தான் ஒருத்தன். மற்றவங்கள் அங்கினைக் இங்கினை காவலுக்கு நிண்டாங்கள்.

நானும், என்னைத் தொடர்ந்து அண்ணையும் வெளியாலை வந்தம்.

காய்ந்து, வாடிக்கிடந்த அவன்ரை முகத்திலை ஒரு பிரகாசம்! என்னை ஏற இறங்க ரசித்துப் பார்த்தான். அவனைப் பாக்கவே எனக்கு அருவருப்பாகக் கிடந்தது.

"ஹரி லஸ்சனாய் நேத்த" எண்டு சொல்லிக் கொண்டு என்னை நோக்கி வந்தான்.

"வீடு செக் பண்ணனும், உள் போ". அவன்ரை யோசினை எனக்கு விளங்கிப் போச்சு. உள்ளை போனால் என்னைச் சும்மா விடாங்கள்."

"நீங்கள் வீட்டைச் சோதியுங்கோ. நாங்கள் வெளியிலை நிக்கிறம்."

அவனுக்கு கோபம் வந்திடுத்து. "எண்ட, எண்ட" எண்டு சொல்லிக் கொண்டு பாஞ்சு வந்து என்ரை கையைப் பிடிச்சு இழுத்தான்.

அண்ணைக்கு முகம் சிவத்துப் போச்சு. ஆவேசத் தோடை பாஞ்சு வந்து மூர்க்கத்தனமாக என்னை விலத்தப் பார்த்தான். அவனாலை முடியல்லை. அதுக் கிடையிலை வேறை ஒருத்தன் ஓடிவந்து அண்ணையை துவக்காலை ஓங்கி இடிச்சான்.

"ஐயோ" எண்டு சொல்லிக் கொண்டு அண்ணை விழுந்து போனான். அண்ணையின்ரை சேட்டைப் பிடுங்கி அதாலை அவன்ரை கையளைப் பின்பக்கமாக கட்டிப்போட்டு இழுத்துக் கொண்டு ஒழுங்கையுக்கை போனான்.

"ஐயோ என்ரை அண்ணையை விட்டிடுங்கோ, என்னை வேணுமென்டால் சுடுங்கோ" எண்டு அழுதழுது, கும்பிட்டபடி அவனைக் கேட்டன்.

"அண்ணையை ஒண்டும் செய்யுறது இல்லை. நீ உள்ளை வாறது". நான் திமிறத் திமிற பிடிச்சு இழுத்துக் கொண்டு போனான்.

"ஐயோ ஐயோ" என்று கத்தினன். என்னைக் கட்டடில்லை கிடக்கச் சொல்லி தள்ளினான்.

"ஐயோ என்னைக் காப்பாற்றுங்கோ.." எண்டு நான் கத்தத் தொடங்க, ஒருத்தன் என்ரை கையையும் வாயையும் அமத்திப் பிடிக்க மற்றவன் என்ரை காலைப் பிடிச்சு தூக்கிக் கொண்டுபோய் கட்டில்லை போட்டாங்கள்.

என்ரை திமிறலும், போராட்டமும் ஒண்டும் பலன் தரயில்லை. அரை மயக்கத்திலை அந்தப் பாவியள் மூண்டு பேரும் ...

அவங்களட்டை இருந்து தப்ப போராடியதில் ஏற்பட்ட களைப்பாலும், ஒரு பெண் எதை இழக்கக் கூடாதோ அதை இழந்து விட்ட பேரதிர்ச்சியாலும், நான் சோர்ந்து கிடக்க, அவங்கள் திருப்தி யடைந்த எக்காளச் சிரிப்போடை வெளியாலை போனாங்கள்.

திடீரென பட் பட் எண்டு வெடிச்சத்தங்கள் வாசலிலை கேட்டுது. தொடர்ந்து "அம்மா" எண்ட அண்ணையின்ரை தீனக்குரலும் கேட்டுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அட பாவியளா அண்ணையைச் சுட்டுப் போட்டியளே?" பாஞ்சு ஓடிப் போனன். அண்ணை ரோட்டிலை விழுந்து கிடந்தான். தலையாலை ரத்தம் கொப்பளிச்சுப் பாஞ்சுது. எங்கடை மண்ணை சிவப் பாக்கிப் போட்டுது. இரண்டு தரம் நடுங்கின அவன்ரை கை ஒரேயடியாக ஓய்ந்துவிட்டது.

பிறகு என்ன? அக்கம் பக்கத்து ஆக்கள் பாய்ந்து, பாய்ந்து வந்தினம்.

ஐயா அம்மா துடிச்சுக்கொண்டு ஓடி வந்தினம். சடங்குகள் நடந்திது.

வழமையான எங்கடை சுடலை பாதுகாப்பு வலயத்திற்குள்ளை இருக்கிறதாலை, அவன்ரை சடலத்தை எங்கேயோ தூரத்திலை இருக் கிற சுடலைக்கு அதுவும் பயந்து பயந்துதான் கொண்டு போச்சினம்.

எனக்கு நடந்ததும், அண்ணையின்ரை தலை யாலை ரத்தம் பாய்ந்து மண்ணைச் செம்மையாக்கியதும் மாறி மாறி கனவு போலை...

கண்ணாலை தண்ணி கூட வரயில்லை. உடம்பும் மனமும் வரண்டு போய்க் கிடந்தது.

"எடி பிள்ளை இப்பிடி நிச்சிந்தையாகப் பார்த்துக் கொண்டி ராதை. மனசிலை உள்ள கவலைகளை அழுது கொட்டிப் போடு. இல்லையெண்டால் மூளையைக் கொண்டு போடும்" இது அம்மா.

அந்த மூண்டு நாளும் நான் ஊண் உறக்க மில்லாமல் யோசிச்சுக் கொண்டிருந்தன். அண்ணை யைப் பற்றி யோசித்துத்தான் மூளையை விடுறன் எண்டு எல்லோரும் நினைச்சினம். எனக்கு நடந்தது அவை யளுக்குத் தெரியாது. அதைச் சொல்லுறதுக்குத்தான் அண்ணை இல்லையே.

நானும் மரத்துப் போயிட்டன்.

எனக்கு நடந்ததை நினைச்சு நான் வெக்கப்பட யில்லை. ஏனெண்டால் அது நான் விரும்பி நடந்த தில்லை. என்னை மீறி நடந்தது. அடக்கிறவனுக்கும் அடக்கப்படுகிறவையளுக்கும் இடையிலை நடந்த ஒரு சின்னச் சம்பவம் அது.

அடக்கப்பட்டவர்களைச் சீண்டிவிட்டதாலை வரப்போற பலனை அவங்கள் ஒரு நாளைக்கு நிச்சயம் அனுபவிச்சே தீருவாங்கள் எண்டு நான் நிச்சயமாக நம்பிறன்.

அதுக்கிடையிலை ரேடியோ சொல்லிச்சிது "... லங்காபுவத் திற்கு கிடைத்த செய்திகளின் படி பருத்தித் துறையிலை நடந்த நேரடி மோதலில் ஒரு பயங்கரவாதி சுட்டுக் கொல்லப்பட்டான். மேலும் பலர் காய மடைந்தனர். இறந்தவனது உடலையும் காயப்பட்டவர் களையும் தூக்கிக் கொண்டு அவங்கள் ஓடித் தப்பி விட்டனர்.

சும்மா இருந்த அண்ணையைப் பயங்கர வாதியாக்கிப் போட்டினை. ஆனால் இனி இவையளுக்கு எதிரான ஒரு பெண் பயங்கரவாதி கிளம்பப் போறாள் எண்டு நினைச்சுக் கொண்டன்.

அந்திரிட்டி மட்டும் வெளியாலை போகக் கூடாதாம். வீட்டிலை இருந்துகொண்டே சிலசில தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டேன். ஒரு உன்னதமான அலக்கை நோக்கி மெதுவாக ஆனால் திடமாக முன்னேறிக் கொண்டிருந்தன்.

இதுக்கிடையிலை அந்த மாச மென்ஸஸ் சரியான நாளுக்கு வரயில்லை. அதிர்ச்சிகளாலையும் யோசனைகளாலையும் பிந்தி இருக்கும் எண்டு நினைச்சன்.

அண்ணையின்ரை அந்திருட்டியும் வந்திடுத்து அப்ப பதினைஞ்சு நாள் பிந்திப் போச்! கொஞ்சம் யோசனை தொட்டது.

காலையிலை லேசா தலைச் சுத்தும் தெரிஞ்சுது.

அப்ப .. அப்ப உன்ரை வயித்திலை அந்தப் பாவியளின் கரு வளருதா? விக்கித்துப் போனன் எனக்கே என்னைப் பார்க்க அருவருப் பாயிருந்திது. இனவெறி பிடிச்ச, கண்ட இடத்திலை கிடந்து எழும்பிற இந்தக் கேவலமானவங்களின்ரை கருவுக்கு நான் தாயா?

என்ன செய்யலாம்?

அழிச்சுப்போடலாம் எண்டால், என்ரை வயிற்றிலை வளருரதை, இது சரியாகதெண்டால் என்ன பிழையானதெண்டால் என்ன அழிக்க என்ரை மனம் ஓம்படயில்லை. வயித்திலை ஒண்டு தங்கியிட்டு தென்றால், அது வளந்து பிறந்து வாழுறதுக்கான சுதந்திரத்தை என்னாலை எப்படி மறுக்க முடியும்?

என்னை நானே மாய்த்துக்கொண்டு இந்த பிரச்சனையிலிருந்து விடுபடலாம் எண்டும் யோசிச்சன்.

ஆனால் அது பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் துவண்டுவிடும் கோழைத்தனமான, கேவலமான செயலாக எனக்குப்பட்டது.

பேசாமல் பிள்ளையை பெற்றுப் போட்டு, யாரால் அது உண்டாக்கப்பட்டதோ அவர்களுக்கு எதிராக மூர்க்கத்தனமாகப் போராடும்படி அதை தயார் செய்யலாம் எண்டும் யோசினை வந்திது.

ஆனால் அது பிறந்து வளர்ந்து வாலிப வயதை எட்ட எவ்வளவு காலம் பிடிக்கும்? அதற்கிடையிலை நாங்கள் நிச்சயம் சுதந்திர மனிதர்களாக இருப்பம் எண்ட நம்பிக்கை எனக்கு இருக்கு.

அந்த நேரத்திலை கொடியவர்களுக்குப் பிறந்த வன் என்ற கெட்ட பேரோடை வாழ்க்கையில் ஒதுக்கப் பட்டு வாழவேண்டிய நிலை அதுக்கு வந்திடுமோ? அதுக்கு நான் காலாக இருக்கிறதோ?

எனக்கு என்ன செய்வதெண்டே தெரியவில்லை.

இப்ப நான் என்ன செய்ய? கொஞ்சம் சொல்லுங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நூல்களுடன் பிணைந்து உறவாட இணைத்து நிற்கும் வாசிப்பின் நினைந்தூறல்

ஏ.எஸ். சற்குணராஜா

குடும்ப மருத்துவராய் குணக்குன்றாய் மனம் நிறைந்த மனிதராய் எழுதிக் கொண்டிருந்தது மருந்துச் சீட்டு மட்டுமல்ல. மனதைத்தொடும் மண்வாசனை இலக்கியங்களையும் தான்.

இயற்கையில் ரசனை, ஓவியங்களில் ஈர்ப்பு, காணும், கேட்கும் விடயங்கள்மீது கலைக்கண் பார்வை. புதிய கோணத்தில் புலனின் தேடல், தேர்ந்த சினிமா விமர்சனம், அறிவார்ந்த கட்டுரைகள், ஆழ்ந்த அறிவை அனைத்திலும் வளர்த்தவர்.

அந்த வகையில் இருபது நூல்கள்மேல் ஆக்கியும் அளித்தவர். இன்று ஐம்பத்தி ஐந்து அரிய நூல்களை ஆய்ந்து அலசி பேனா மையைப் பேப்பரில் சிந்தி வாசிப்பில் நினைந்தூறல் என்னும் நாமமிட்டு வந்தவொரு நூல்பற்றி வரைகிறேன் சில வரிகள்.

வியாபாரிமூலை மண்ணில் உதித்தவர். பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்த்தவர். அடியேனும்கூட அதேஊர்தான். பராயம் அறிந்த பாலகன் காலம் பார்த்தேன் அவரை வலிகள் தீர்க்க வைத்தியசாலை யில். வாலிபம் வந்ததும் வட்டமோ விரிந்தது. இலக்கிய உறவுடன் இன்று வரைக்கும்.

சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், கட்டுரை கள், நாடகம், சினிமா, அறிவியல், அழகியல், மருத்துவம் அனைத்தையும் அளந்தே நேர்மனப்பாங்குடன் நிதமும் நோக்கிப் பேனா பிடித்ததால் பிறந்த வரிகள் ஆக்கங் களை விளங்க வைக்கும். எவர் மனதையும் மயங்க வைக்கும்.

சமூகசிந்தனையுடன் யோசித்தவர். யதார்த் தத்தை நேசித்தவர். முற்போக்கைப் புதுமைகளை போசித்தவர். மனிதத்தை மண்வாசனையைப் பூசித்தவர். அடக்குமுறையை அடிமைத்தனத்தை தூசித்தவர். விலங்குகளுடைப்பை யாசித்தவர். பார்வை யில் பட்டஎல்லாம் வாசித்தவர். ரசித்தவர், பகிர்ந்தவர்.

அவரின் விமர்சன வரிகளில் பின்வருவனவற்றின் தாக்கங்களை அவதானிக்கலாம்.

கதைகளில் தெறித்த வடமராட்சி மண்ணின், வடமராட்சி கிழக்கு மண்ணின் மொழிவழக்கு, முற்போக் கான கருத்துகளுக்கான வரவேற்பு, கவித்துவம் சொட்டும் வரிகளின் மீதான ரசனை, எம் மண்ணின் நிகழ்வுகள், அதில் உறையும் விழுமியங்கள், கதைகூறும் ஒழுங்குமுறைகள், கற்பனைத் திறன்கள், அதில் இழையோடும் மறைகருத்துக்கள் மீதான மகிழ்வுகள், புத்தக வடிவமைப்பில், அட்டைப்பட ஓவியத்தில் அவர் கொண்ட அக்கறைகள், வறுமையற்ற தேடல்களை, அறிவார்ந்த கருத்துக்களை அழகாக அவர் ரசித்து, அருமையென இனங்காட்டி மெருகேற்றி ஆக்கியநூல் அபாரமென மொழிகின்றேன்.

நாடகத்தின் மறுவாரப்பாக, யதார்த்தங்களுடன் பயணிக்காத இன்றுவரை தொடரும் தமிழ்ச்சினிமா இயல்புகளைச் சாடி ஓரிரு சினிமாக்களே உயிருள்ளவை என்றுணர்த்தி சினிமா நூல்வரவின் தேவையினை நாடுகிறார். எளிதில் விளங்கும் மொழிநடையின் முக்கியத் துவத்தை எடுத்தியம்பி வேண்டா விடயங்களை விட்டுவிட வேண்டுகிறார். புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தில் புகுந்து நிற்கும் அந்நிய பாத்திரங்களை ஆதரித்து நிற்கிறார். போலி நாகரிக மோகம், பொருள்தேடும் மோகம், புலப்பெயர்வால் மறையும் பண்பாட்டை மீட்டெடுக்க சிலவரிகள், வளரும் பெண்களுடன் வளர்ந்து கொள்ளும் வேலியுடன், இலக்கியக் காதலினை எடுத்தேந்தும் பெண்ணடிமை மண்ணின் பெண்ணி யத்தின் தற்காலம் இன்னும் உண்மை விடியலினைக் காணாத எம்மகளிர் சிந்தனையைக் கிளற பெண்ணுரி மைக் கருத்துக்கள், நிஜக்காதல் சிந்தனைகள், திருமணத்தின் பின்பும் திறமைகளைத் தொடரப் பெண்களைத் தட்டி எழுப்பும் எழுத்துக்களை ஏந்திநின்று எழுதுகிறார். அத்துடன் அகஉலகச் செய்திகள், ஆண் பெண் உறவின் நுட்பங்கள்

1

அனுபவ முதிர்ச்சியுடன், முகஞ்சுழிக்காத முறையில் யதார்த்தப்பண்புடன் பரிசோதனைக் களமாக எழுத்துலகில் வருவதை, எங்கள் சமூக அமைப்பில் இவை தொடர்பான கருத்தின் நுழைவு, கருணை, பாசப் பொழிவு போன்றவற்றுடன் ஆக்கங்கள் உறவாடுவதை, தாங்கி வருவதை வரவேற்கிறார். எதிர்பார்க்கிறார்.

கிராமப் புறங்களில் ஒழுக்கம், விழுமியம், சடங்கு களுக்குள் ஒளித்திருக்கும் மூடநம்பிக்கைகளையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணடிமைத்தனத்தையும், சாதியம் மற்றும் சமூக அடக்குமுறைகளை வெளிக்கொணர்ந்து விரட்டும் எழுத்துக்களைத் தன்விரலால் சுட்டுகிறார். தாங்கள் அடக்குவதைத் தான்மறந்து தன்னை அடக்குவதைத் தட்டிக்கேட்க முனைவோரின் முரண்பாடுகளை முன் கொண்டுவரும் எழுத்துக்களைப் புரிந்துகொள்ள வாசகனுக்கு வழிகாட்டும் பண்பு வெளிப்படுகிறது.

மண்ணின் விடுதலை வேண்டிப் போராடியவர்களே மண்ணைச் சிவப்பாக்கியதை, பட்டமும் வழங்கிப் பட்ட மரத்திற்குப் பலிகள் கொடுத்ததை, வீங்கிப் பருத்தவர் வீம்புகள் புரிந்ததை விசனம் கொள்வதுடன் அதுபற்றி எழுதும் நூல்கள் நடுநிலைமையுடன் உண்மைக் கருத்துகளுடன் பிறந்திட இனிய வரவை என்றும் ஏந்திட இயல்பாய் சொல்கிறார்.

விமர்சனத்தில், அவர் வரிகளில் யாரையும் பழி போடாமல் எதிர்மறையாய் நோக்காமல் உரிய இடங்களில் பாராட்டும், தவிரக்க வேண்டியதைத் தயவாயும், வளரவேண்டியதற்கு உரமாயும் தன்கருத்தை வழங்கிக் கடந்து செல்கின்றார். குழந்தைகளின் பிஞ்சுமனத்திற்கான வழிகாட்டல் நூலை ஆர்வத்துடன் படிக்கும்படியும், கற்பனை நயத்துடன் சிறந்த சொற்கோப்புடன் கவிசொல்லியவரை, கம்பியின் உள்ளே இருந்தாலும் கணப்பொழுதையும் வீணாக்காமல் சிறைப்படாத கருத்துடன் சமகால இலக்கியவானின் நிலவானவரை பாராட்டுகிறார்.

அவர் சுட்டும் நூல்களில் அதிகாரம், பொருளாதாரம் அற்ற நிலையிலும் நிலப்பிரபுத்துவ எச்சங்கள் தாங்கிநின்று சோற்றுக்கு வழியற்ற வாழ்விலும் பழம்பெருமை பேசுபவர்களை, சிதையும் வாழ்வுகள், யுத்தம், உலகமயமாக்கலின் தாக்கம், கட்டுப்பாடற்ற உணர்வுகள், நடத்தைகள், சூழல். சமூகத்துடன் இயைபற்ற வாழ்க்கை இதனால் பற்றிக்கொள்ளும் நோய்கள், துன்பங்கள் ஏற்படும் களங்களை இனங்காட்டி மகிழ்ச்சி, அன்பு போன்ற நேர்நிலை உணர்வுகளை புலப்படுத்தும் இடங்களை அடையாளம் காடடுகிறார். கோபம், பகைமை போன்ற எதிர்நிலை உணர்வுகள் தரும் பாதிப்பு, உணர்வுகள் புரியப்படாமலே முடியும் வாழ்க்கை நிலைகளை மருத்துவம் தொடர்பான நூல்களைப் பற்றிய பார்வையில் எமக்கு வெளிச்சமிட்டு விளக்குகிறார்.

வாய்மொழி, உடல்மொழி தொடர்பாடல்களை தெளிவாக, புரிதல்களுடன் மேற்கொள்ள சமூக ஒற்றுமை உணர்வு மேம்பட, செழுமைகளைச் சேர்த்து உன்னதங்களுடன் உலாவர, எழுத்தாளர்கள் சொல்வதும் செய்வதும் இடைவெளியற்றதாக இருத்தலை எதிர்பார்க்கிறார்.

நாடக வளர்ச்சிக்கான செல்லவேண்டிய பாதை , கிராமிய வாழ்வின் தரிசனங்களின் முக்கியத்துவம் மற்றும் செக்குமாடாக ஒரே வட்டத்தில் சுற்றிக்கொண்டிராமல் பரந்த உலகில் பயணித்துத் தேடலை மேற்கொள்ளுதல் போன்றவற்றிற்கான ஆலோசனைகள் தருகின்றார்.

எடுத்தாண்ட நூல்களில் மறந்துபோன விடயங்களை மீண்டும் காட்சிப்புலத்திற்குக் கொண்டு வருதலை, வரலாற்று ஆவணமாக சில எழுத்துக்கள் மிளிர்வதை, மறுமலர்ச்சியூட்டும் கவிதைகளை, கடந்தகால, நிகழ்கால நிகழ்வுகளின் பதிவுகளை, கால ஓட்டத்தில் கரைந்து நீர்த்துப்போன இனிய கணங்களை எம்முன் நிறுத்தித் தேடிப்படிக்கத் தேவையானவற்றை இனங்காட்டி நிற்கின்றார். க்ரியாவின் தமிழ் அகராதி அதனில் இலங்கைத் தமிழிற்கு இடம் எனும் விடயங்கள் அதற்குக் குலசிங்கம் அண்ணையின் பங்களிப்பு போன்ற விடயங்களும் அலசப் படுகின்றது. மலையக மக்களின் கல்வி தொடர்பான நூலை அலசி எதிர்காலத்திலாவது அவரக்ளுக்குப் பாரபட்சமற்ற கல்வி கிடைக்குமா என்ற ஏக்கத்தையும் வெளிப்படுத்துகிறார்.

மு.பொ வின் படைப்புகளுக்கு முன்னால் தன் இலக்கியவறுமையை, எழுத்துக்களின் போதாமையை நினைத்துக் கூனிக்குறுகிப்போவதாகவும் தன் கவலையைக்கூறி எம்மை ஆச்சரியப்படுத்துகின்றார்.

2

எழுதியவர் மறைந்து போகலாம். ஆனால் தரமான எழுத்துக்கள் காலத்தால் அழியாதவை. இவை எழுதத்தாளர்களுக்கு மறுவாழ்வை அளிக்கின்றன. சிற்றேடுகள் எழுத்தாளர்களுக்கு களமாகவோ, ஏணியாகவோ அமைகின்றன. எனவே இவற்றின் வரவு காலத்தின் தேவையாகின்றது. இவற்றிற்கு நாம் ஆதரவை வழங்கி அவற்றின் வருகையை, தொடர்கையை ஊக்குவிப்போமாக.

ஆழ்ந்த வாசிப்பு, பரந்துபட்ட அனுபவங்கள், இலக்கியத்தில் மட்டுமல்ல எவற்றிலுமே தினந்தேடல் இல்லையெனில் இவையெழுத எவராலும் முடியாது. அந்த வகையில் டாக்டர் அவர்கள் வாசித்த நூல்கள் கணக்கிட முடியாதவை. அவற்றில் ஐம்பத்தைந்து நூல்கள் பற்றிய அவரது பார்வை நூலாகியுள்ளது. இயந்திரமயமான இன்றைய உலகில் நேரம் கிடைக்கவில்லை என்ற சுலோகத்துடன் உலாவும் அன்றைய மானிடர்கள் மத்தியில் நிறைந்து வழியும் நோயாளர்களைப் பார்வையிடுவதுடன் நில்லாது தினசரி வாசிப்பிற்கு நேரம், எழுதுவதற்கு நேரம் என நேரப்பங்கீட்டுடன் நகரும் திட்டமிடலுடன்கூடிய வாழ்க்கைமுறை

பாராட்டப்படவேண்டியதொன்றாகவே உள்ளது. இன்னமும் அவர் எமக்கு சிறந்த எழுத்துக்களை இனங்காட்டும் வழிகாட்டியாக, மருத்துவ நூல்கள், இலக்கிய நூல்கள் போன்றவற்றின் படைப்பாளியாக உடல் நலத்துடன், உளநலத்துடன் தொடர்ந்து தமிழ் எழுத்துலகில் பயணிக்க வேண்டும். காலமும் அதற்குக் கைகொடுக்க வேண்டும்.

வாழும் காலத்திலேயே சாதனைகள் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் ஜீவநதி ஆசிரியர் திரு க.பரணீதரன் அவர்களின் சிறப்பிதழ் வெளியிடும் முயற்சிக்கும், அவர் என்னையும் எழுத வைத்த சந்தர்ப்பத்திற்கும் நன்றிகளுடன், முயற்சிகள் திருவினையாகத் தொடர அவர் கரத்திற்கு என்றும் வலுச்சேர்த்திடுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை ஊடகங்களில் பெருவாரிக் குழுமத்தினரின் ஈர்ப்புக்குரியதாக சினிமா அமைந் துள்ளது. எனினும் பிரார்த்தனைக்குரிய விம்பங்களை முன்னிறுத்தும், பெருந்திரள் சுவைஞர்களின் கேளிக்கையாக மட்டுமே சினிமா நோக்கப்படுவ தில்லை. மகத்தான அனுபவங்களைத் தொற்றச் செய்யும் மாற்று சினிமாவும் கவனக்குவிப்பிற்கு உள்ளாவது குறிப்பிடத்தக்கது. தன்னைத்திருப்திப்படுத்தும் திரைப்படங்களையே சிறந்ததெனக் கருதுகின்ற பண்பு அனைவரிடமும் உள்ளது. திருப்தியான திரை மனத்தால் அளவிடப்படுவதாய் அமையலாம். முதன்மை நெறி சினிமாவிலிருந்து விலகிய மாற்று சினிமாவுக்கான சுவைஞர்கள் தமக்கான பிரதிகளைத் தேடிப் பயணித்த வண்ணமேயுள்ளனர். கலைத்தரமான படங்களைப் பார்க்கும் வாய்ப்பு எளிதிலே கிடைத்து விடுவதில்லை. பரிந்துரை சினிமா திரைமனத்தால் நிராகரிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளமை யாவரும் அறிந்ததே! திரை ரசனை ஒவ்வொருவருக்கும் வேறு பட்ட வகையில் அமைந்துள்ளதால், உளத்திருப்தி தரு கின்ற கலைத்துவ சினிமாவைத் தேடிக் கண்டடைதல் எளிதானதன்று. அவ்வாறு கண்டடைந்த திரைப் படங்கள் குறித்த தனது பார்வையினை பிறருக்கு இனங் காட்டி, அவர்களின் திரைப்படிம நயத்தை மேம் படுத்தத் திரை விமர்சகர் முயற்சி எடுக்கின்றார். அத்தகைய முயற்சி ஒன்றின் குறிகாட்டியாகவே இந்நூல் அமைந்துள்ளது.

மருத்துவரான எம்.கே.முருகானந்தம் தரமான திரைப்படச் சுவைஞர் என்பதை இந்நூலிலுள்ள திரைப்படங்கள் இனங்காட்டு கின்றன. அற்புதமான விமர்சகர் என்பதைக்

# நாதீதமான நகரும் படிமங்கள்

இ.சு.முரளிதரன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. தமிழ்சினிமா தமிழல்லாத இந்திய சினிமா- சிங்கள சினிமா ஆங்கில சினிமா கொரிய, பிரெஞ், ஸ்பானிஸ், ஈரானிய சினிமா மற்றும் குறும்படங்கள் என அனைத்து மொழிகளிலும் தரமான திரைப்படங்களைத்தேடிப் பயணித்துள்ளார். ஒவ்வொரு படத்தையும் சட்டகங்கள், படத்தொகுப்பு, இசை, குறியீடு என பன்முக நுட்பத்தோடு அலசி ஆராய்கின்றார். துன்பியல் சார்ந்த காட்சிப் படிமங்களோடு அதிகம் ஒன்றி விடுகின்றார் என்பதைக் கட்டுரைகள் ஆதாரப்படுத்துகின்றன. ஒவ்வொரு விமர்சனத்தையும் அலாதியான பீடிகையோடு ஆரம்பித்து, நேர்த்தியான பாதையில் வாசகனை அழைத்துச் செல்கிறார். திரைப்படத்தினை முழுமையாகப் பார்க்கின்ற தாடனத்தோடு விமர்சித்துச் செல்கின்றார். எனினும் விடுபார்வம் குறைந்து விடக்கூடாதென்ற நோக்கில் விடுபடலையும் தரிசிக்க முடிகிறது.

மனித நேயக் கண்ணாடி அணிந்தநோக்கு நிலையையும் இனங்காண முடிகின்றது. மருத்துவராக அமைவதால் துறைசார் அனுபவங்களோடு இணைத்து விமர்சிக்கின்றார். மேலும் இயற்கை எழிலும், நடப்பியல் சார்ந்த ஒளிப்பதிவுச் சட்டகங்களில் இதயத்தைப் பறிகொடுப்பவராகவும் அமைகின்றார். "பஞ்சு போலச் சொரிந்து கொண்டேயிருக்கும் பனித்துளிகள். மூடி நிற்கும் கனத்தவானம், பனி படர்ந்த வெறும் தரைகள், உறைந்து கிடக்கும் நதிகள், பனியால் ஆடை போர்த்தி இலையுதிர்த்தி உறைந்திருக்கும் நெடுமரங்கள்" என The way back திரைப்படம் குறித்து எழுதிச் செல்வது தக்க சான்றாகும். அனைத்து விடயங்களையும் எதுவிதமான மனத்தடையும் இல்லாமற் பதிவு செய்து விடுகின்றார்.

சமரசங்களுக்கு உட்படாத விமர்சனமாக அமைவது பாராட்டுக்குரியது. அசோக கந்தகம் இயக்கி "இனி அவன்" திரைப் படத்தின் சிறப்புகளை






வெளிப்படுத்தும் அதேநேரம், பலவீனங்களை துல்லியமாகக் சுட்டிக்காட்டுகின்றார். இசை மீதான அதீத ஈடுபாட்டையும், விழிப்புலனற்றோர் மீது கொண்ட அக்கறையினை யும் கட்டுரைகளின் வழியே உணர முடிகின்றது. ஒவ்வொரு திரைப் படத்தையும் அந்தந்த தேசத்தின் அரசியலோடு பிணைத்தும் சர்வதேச மானுட நேயத்தோடும் அணுகுவதும் குறிப்பிடத்தக்கது.

அஞ்சனம், நிழல்யுத்தம், அழியாத கவிதை, கர்ணமோட்சம் ஆகிய குறும்படங்கள் குறித்தும் விரிவாக சிலாகித்துள்ளார். "திரைப்படம் உணர்வு பூர்வமான கருவைப் பேசுகிறது. அதை நன்றாகச் செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் தேர்வு சரியானது தானா?" என கருணைக் கொலை சார்ந்த தனது பார்வையினை மிக விரிவாகப் பதிவு செய்துள்ளார். "கர்ண மோட்சம்" குறும்படமானது எனது முகநூல் நண்பர் முரளிமனோகர் இயக்கியது. அற்புதமான அனுபவத் தொற்றலை நிகழ்த்திய குறும்படம் என்பதை எம்.கே.முருகானந்தன் விரிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

இனி அவன், வெந்து தணிந்தது காடு, தீபன், காஞ்சிவரம், போர்க்களம் என்னும் ஐந்து திரைப்படங் களும் தமிழ்மொழியோடு தொடர்புபட்டன. இனி அவன், தீபன் என்பன பிறமொழி இயக்குநர் களின் பார்வையில் உருவான தமிழ்ப் படங்களாகும். ஐந்து திரைப் படங்களும் மாறுபட்டதிரை மொழியையும், கதைவெளியையும் கொண்டவை. நூலாசிரியரின் திரைநயதே உணர்ந்து கொள்ள முடியும். வணிக சினிமா என்னும் சிலந்தி வலைக்குள்ளே சிக்குண்ட திரைப்பட ரசனையை இத்தகைய விமர்சனங்கள் மீட்டெடுக்கும் என்ற நம்பிக்கை கலையுலகில் நிலவுகின்றது. அற்புதமான அதிர்வுகளை நிகழ்த்தக்கூடிய இந்நூலை எழுதிய எம்.கே.முருகானந்தன் அவர்களைப் பாராட்டி நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# “மருந்தெனல் நோய் இனி வராதிருக்க”: அறிவியற் பிரசுரமொன்று பற்றிய சில குறிப்புகள்

■ த.கலாமணி

நோய் வந்துற்றபின் மருந்துக்காக அலைவதை விட அந்நோய் வராது தடுத்தலே சிறந்த மருத்துவ முறையாகும்.

மனித சமுதாயத்தின் தோற்றத் துடனேயே மனிதனைத் தாக்கும் நோய்களும் தோன்றியிருக்க வேண்டும். இயற்கையின் அற்புதங்களை அவதானித்து அவற்றின் உண்மைகளைத் தெளிந்து கொண்ட மனிதன், மனித சமுதாயத்தைத் தாக்கும் நோய் நொடிகளிலிருந்து தன்னைப் பாதுகாக்கும் வழிமுறைகளையும் தேடினான். இன்று அறிவியல் துறையும் மருத்துவத் துறையும் எவ்வளவோ தூரம் முன்னேறியுள்ளன. எனினும் நவீன தொழில் நுட்பமும் அறிவியல் வளர்ச்சியும் புதிய பல நோய்களைத் தோற்றுவித்துள்ளன என்பதும் மறுக்க முடியாத ஓர் உண்மை. இப்புதிய நோய்களிற் பல எமது கவலையீனத்தினாலேயே ஏற்படுகின்றன. இவற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்க நாம் எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கைகளும் போதிய தடுப்பு முறைகளும் வலியுறுத்தப்படவேண்டியது இன்று மிகவும் அவசியமாகும்.

பெரியவர்களின் கவலையீனம் சிறுவர்களின் பார்வைப் புலனைப் பறிப்பதற்கு எவ்வாறு காரணமாகின்றது என்பதை இலகு தமிழிற் கூறும் சிறு பிரசுரமொன்று அண்மையில் வெளிவந்துள்ளது.

“சிறுவர்களின் கண்களைக் காக்க வாரீர்” என் பெயரில் டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்களால் எழுதப்பட்ட இச்சிறு பிரசுரத்தை, கையடக்கமான நூல் வடிவில் “ஊற்று நிறுவனம்” பதிப்பித்துள்ளது.

பொலித்தீன் உறைகளில் அடைக்கப்பட்டு விற்பனையாகும் சுண்ணாம்பு எவ்வாறு சிறு பிள்ளைகளின் கண்களைத் தாக்கி அவர்களின் கண்பார்வையையே இழக்கச் செய்கின்றது என்பது பற்றிக் கூறுவதோடு, அதனைத் தடுக்க நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இந்நூல், “போதிய பகுத்தறிவினாலும் தடுப்பு நடவடிக்கைகளாலும் முற்றாகத் தவிர்க்கக் கூடியதாக இருந்தும் கூட கவலையீனத்தால் கண்பார்வையை இழப்பது மன்னிக்கக்கூடிய ஒன்றல்ல” என வலியுறுத்துகின்றது.

இந்நூலின் ஆரம்பமே மிக அழகாக அமைகின்றது:-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்பார்வையை இழப்பது என்பது எத்தனைய கொடூரமான நிகழ்ச்சி. அதுவும் தான் பிறந்த நாள் முதல் தன்னையும் தனது உற்றார் உறவினர் நண்பர்களையும், தனது சுற்றாடலையும், தான் விரும்பிய பொருட்களை யும், கண்கவர் வண்ணங்கள் நிறைந்த இயற்கைக் காட்சிகளையும் கண்களால் ரசித்தும் பார்த்தும், வார்த்தைகளாற் சொல்ல முடியாத பல நுண்ணிய உணர்வுகளை கண்களால் உணர்த்தியும் உணர்ந்தும் வாழ்ந்த ஒருவன் திடீரெனப் பார்வையை இழப்ப தென்றால் அது எவ்வளவு துன்பமும் துயரமும் ஏமாற்றமும் தரும் ஒரு சம்பவமாகும்"

என்ற வரிகளைப் படிக்கும்போது, நூலாசிரி யரின் தமிழ் நடையில் ஒன்றிப்போய், இப்பிரசுரத்தை ஒரே மூச்சில் படித்து முடித்து விடவேண்டும் என்ற ஆர்வமே ஏற்படுகிறது.

டாக்டராக இருந்து, தான் பெற்றுக்கொண்ட அனுபவத்தைத் தரவுகளாகத் தரும் நூலாசிரியர், இந்த அசம்பாவிதம் ஏற்படும் விதத்தையும் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல், அதற்கான முதலுதவியையும் வைத்திய சிகிச்சையையும் தடுப்பு முறைகளையும் கூட நன்கு விளக்குகிறார். ஒரு வகையில் நன்மையாக அமையும் செயற்பாடொன்று மற்றொரு வகையில் எவ்வளவு தீமையை விளைவிக்கின்றது என்பதை ஆணித்தரமாகவே ஆசிரியர் குறிப்பால் உணர்த்து கிறார். தடுப்பு முறைகளாக ஆசிரியர் கூறும் வழி வகைகள் தேசியரீதியில் முன்வைக்கப்பட வேண்டி யவை. "புதிய சட்டவாக்கம் மூலமாகவோ அன்றி வேறு நிர்வாக முறைகளிலோ சுண்ணாம்பைப் பொலித்தீன் உறைகளில் அடைத்து விற்பதை முற்றாக நிறுத்த வேண்டும்" என்று ஆசிரியர் வலியுறுத்துவது இன்றைய காலத்தின் தேவையின் ஓங்காரமாகவே ஒலிக்கிறது. இச்சிறு பிரசுரம், இன்றைய ஆரம்ப சுகாதார நிலையங் களில், மக்கள் மத்தியில் அவசியம் படித்துக் காண்பிக்கப் படவேண்டிய ஒன்றாகும்.

தமிழில் விஞ்ஞான வளர்ச்சிக்கு அத்தியாவசிய மான எழுத்துகளும் சொற்களும் சஞ்சிகைகளும் இல்லை என்பதோடு, விஞ்ஞானத் தரம் வாய்ந்த நூல்கள் விற்பனையாவதில்லை என்பதும் கண்கூடு. இதற்குக் காரணமாக, தமிழ் பேசும் மக்கள் மத்தியில் விஞ்ஞான அறிவும் ஆர்வமும் வேண்டிய அளவு இன்னமும் வளரவில்லை என்று கூறுவது முற்றாக ஏற்கக்கூடியதுமன்று. எண்ணிக்கையில் குறைந்த அளவில் வெளியாகும் விஞ்ஞான சஞ்சிகைகளும் அறிவியல் நூல்களும் தாங்கி வருகின்ற விடயதானங் களின் "தரமட்டமும்" அந்நூல்கள் பரந்த அளவில் மக்களைச் சென்றடையாமைக்கு முக்கியமான ஒரு காரணமாகும் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டி யதே. ஒரே சஞ்சிகையிலேயே "பாமரர் முதல் பட்டம் பெற்றவர் வரை அறிவூட்டல்" என்பது பொருத்த மானதுமன்று.

இத்"தரவேறுபாட்டை"க் கவனத்திற் கொண்டு "ஊற்று நிறுவனம்" அதன் சஞ்சிகைகளில் இடம் பெறுகின்ற முக்கியமான கட்டுரைகளைச் சிறு பிரசுர வடிவில் தருவது மன நிறைவைத் தருகிறது. ஊற்று நிறுவனத்தினர், குறிப்பாக அதன் உதவிப் பிரதம ஆசிரியரான டாக்டர் க. சுகுமார் அவர்கள் இவ்விட யத்தில் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் மனங்கொள்ளத் தக்கன. ஊற்று நிறுவனத்தின் ஏனைய சிறு பிரசுரங் களைப் போலன்றி, "சிறுவர்களின் கண்களைக் காக்க வாரீர்" என்ற இப்பிரசுரம் அதன் உள்ளடக்கத்தைப் பிரதிபலிக்கக்கூடிய படம் ஒன்றையும் அட்டையில் தாங்கி, பார்ப்போரைப் படிக்கத் தூண்டும் வகையில் அழகுற அமைந்துள்ளது. ஈழத்திலும் மிகச் சிறந்த முறையில் நூல்களை அச்சிட்டு வெளியிட முடியும் என்ற நம்பிக்கையை அண்மைக் காலங்களில் தோற்று வித்திருக்கும் "யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்"



இச்சிறு நூலின் அமைப்பிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளது.

"யாருக்காக எழுதுகிறோம்" என்ற தெளிவின்றிப் படைக்கப்படும் படைப்புகள் மீதே "ஐயுறவுகள்" தலை தூக்கும். "ஊற்றை ஒத்த விஞ்ஞான சஞ்சிகைகளில் எழுதப்படும் விடயதானங்கள் "மக்களு"க்னெ வழங்கப் படும் போது, வழங்கப்படும் விடயதானத்தின் "சாரத்தை"ப் பாதிக்காத வகையில், மக்களுக்குக் குழப்பமாக அமையும் பகுதிகளை நீக்கி வெளியிட வேண்டியதும் அவசியமான தொன்றாகும். இவ்வகையில், இந்நூலில் இடம்பெறும் இரசாயனச் சூத்திரங்களும் சமன்பாடுகளும் நூல் சொல்லவந்த "சேதி"க்கு அவசியமானவைதானா என்ற சந்தேகம் எழுவதைத் தடுத்துக் கொள்ள முடியவில்லை. இனிவரும் நூல்களில் இது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தினமும் மக்களோடு தொடர்பு கொண்டி ருக்கும் டாக்டர் முருகானந்தனிடமிருந்து "மக்களுக்" கென இன்னும் பல விடயங்களை எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கையை இச்சிறு நூல் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்ட மரம் ஒன்று

மலரகளே பேசுங்கள்
அகக் கண்ணில் மறைந்திருக்கும்
சுவைக்கனிகளை
மீட்டுங்கள்.

நெடுதுயர்ந்த வாழ்வு
நீக்கமறக் கழிந்து
களிப்பும் கலங்கி நீருமாக
கட்டைப்பாவடையும்
இரட்டைப்பின்னலும்
கடைக்கண் பார்வையில்
சொக்கித்திணறிய வசந்தகாலம்
காலாவதியாகவில்லை.
விட்டுத் துரத்த வைத்த நேசம்
சொற்களாக
சிந்தாத போதும்

கவிதை ஊற்றெனப்
பெருகிப் பாய்ந்தது
கண்களில் உண்மை.

நரைத்த சடை
நடுங்கும் கரங்காளல்
வருடும் நேரமிது
சொக்கை மறைத்த
பொக்கை வாயால்
காதல் மொழிந்தால்
"காயல்" எனக்
கருகித் தெறிக்கும்
வார்த்தைகள்

நெடுதுயர்ந்த காலம்
கருகுகிறது
கட்டையில் போகும்
காலம்
அணைக்கத் துடிக்கிறது
ஆனாலும்
அணையவில்லை
அன்று மலர்ந்த காதல்.

மலர்களே பேசுங்கள்
அகக் கண்ணில்
மறைந்திரக்கும்
சுவைக் கனிகளை
மீட்டுங்கள்



## பட்ட மரம் ஒன்று

கடலோர வெட்ட வெளி
தன்னில்
மண்ணோடு
இற்றுவிடும் காலம்
நோக்கி அயர்கிறது
பட்ட மரமாகப் போகும்
கூட்டமொன்று
மௌனம் கோலோச்சும்
வீடென்னும் கூடுகளில்
தனித் தனியாக
முணுமுணுக்கவும்
திரணியற்று
காத்திருக்கின்றன
காலதேவன்
வரவிற்காக
முதுமைச்
சமுத்திரங்களில்
பெற்ற மக்கள்
நீந்திக் களிக்கின்றன
ஜாலியாக
மேலை நாட்டுக்
கடல்களில்
ஜோடி ஜோடியாக.
வாழ்க்கைச் சக்கரம்
சுற்றிவரும்
காலம்
நெடுதொலைவில்
இல்லை.


- எம்.கே.முருகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜீவநதி வெளியீடுகள்





எம்.கே.முருகானந்தன்
சிறுகதைகள்
500.00




எம்.கே.முருகானந்தன்
கட்டுரைகள்
1000.00




எம்.கே.முருகானந்தன்
கவிதைகள்
600.00




எம்.கே.முருகானந்தன்
கட்டுரைகள்
500.00





ஆதிலட்சுமி சிவகுமார்
கட்டுரைகள்
800.00




கந்தர்மடம் அ.அஜந்தன்
சிறுகதைகள்
750.00




கந்தர்மடம் அ.அஜந்தன்
கட்டுரைகள்
400.00




எம்.கே.முருகானந்தன்
கட்டுரைகள்
200.00




ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்
சிறுகுதைகள்
750.00




வரதர்
கட்டுரைகள்
500.00




வரதர்
குறுநாவல்கள்
500.00




வரதர்
சிறுகதைகள்
500.00

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org